
குருவே துணை
வாழ்க வையகம்
வாழ்க வளமுடன்
வேதாத்திரிய பார்வையில்
தாயுமானவரின் மௌனகுரு வணக்கம்...
அருள்நிதி
மன்னார்குடி
பானுகுமார்.
• டிசைன் ~ தவம் ஆர்ட்ஸ் •

# வேதாத்திரியப் பார்வையில்

# தாயுமானவரின் மௌனகுரு வணக்கம்

அருள்நிதி. மன்னார்குடி பானுகுமார்

இதனுள்ளே

1. தாயுமானவரின் குரு மௌனகுரு
2. ஞானமாகிய மதம் பிடித்த யானை
3. உய்வித்த குருவே வாழ்க.
4. மறப்பதும் பின் நினைப்பதுமே மாயை-ஞானம்
5. வாழ்வித்த ஞானகுருவே
6. தூய்மையை நாடிச் செல்லும் பயணம்
7. உய்யும் வகை தேடி உள்ளம் உருகி நின்றேன்
8. உன் மகிமையது சொல்ல எளிதோ?
9. சரணாகதி என்னும் சாந்தநெறி
10. தான்தனது என்கின்ற தருக்கற்று வாழ
11. வீடுபேறு எனும் உயர்ந்த பதமும் ஈதே

# வாழ்த்துரை

தவம் ஆர்ட்ஸ், ஓவியர்
அ\நி இரா.செல்லப்பா,
தவம் பள்ளத்தூர் மனவளக்கலை யோகா,
காரைக்குடி. அலைபேசி- 9442766575.

"தொட்டனைத் தூறும் மணற்கேணி மாந்தர்க்குக்
கற்றனைத் தூறும் அறிவு."

தானே முயன்று கற்றுக்கொள்ளும் நிலை கை கூடாவிட்டால், கற்றுக்கொண்டவர்களிடம் கேட்டுக்கொண்டாவது அறிவு பெற வேண்டும் என்று சொல்கிறது திருக்குறள்...

ஆம் அன்பர்களே,

குரு என்பவர், பிரபஞ்சத்தில் உயிரினங்கள் அனைத்தும் நல்லதோர் நிலை கிட்ட, தன்னை முழுமையாக சோதனைக்கு உட்படுத்தி, இன்ப துன்ப உணர்வுகளை, அனுபவ அனுபோக செயல்முறைகளை உள்ளுணர்வாக உணர்ந்து, செயலில் கரைந்து,

இவ்வையகத்தில் உள்ள உயிரினங்கள் அனைத்தும் வாழ்வாங்கு வாழ, பிறவிப் பயனை நல்க, தான் கற்றதை, உணர்ந்ததை, அவ்வழியே தானும் வாழ்ந்து, அனைவரும் வாழ பயன் எதிர்நோக்காமல் வழிநடத்திச் செல்பவரே குரு.

அதன்வழியிலே, நம் அருட்தந்தை தத்துவஞானி வேதாத்திரி மகரிஷி அவர்கள் நிறைய மகான்களோடு உயிர்த்தொடர்பு பெற்று,

செயல்விளைவு உணர்கல்வி, சீர்காந்த நிலைவிளக்கம், இறைநிலை விளக்கம் முழுமையாக அனைவரும் பயன்படுத்தும் வகையில் வகுத்து தந்தவர் நம் அருட்தந்தை...

அதன் வழியிலே நம் எழுத்தாளர் பேராசிரியர் அருள்நிதி மன்னார்குடி பானுகுமார் ஐயா அவர்கள், அனைவரது நலன்பயக்க- தான் உணர்ந்ததை உள்ளுணர்வாக பேனா முனைகளின் வாயிலாக உணர்த்தியும், உயிர்ப்பாக நம்மிடையே நூல்களின் வாயிலாக உணர்த்திக் கொண்டிருக்கிறார்...

மௌனகுரு என்றால் பேசமாட்டார் என்று பொருள் அல்ல. அதிகம் பேசமாட்டார். அளவாகப் பேசுவார். மிதமான சொற்களைத் தான் பேசுவார்.

தாயுமானவர் குருவிடம் இறைவனைக் காண்கிறார். குரு மௌனமாக இருந்து, சொல்லாத வார்த்தையை சொன்னார் என்று கூறுகிறார்.

மோனத்தின் பெருமையை வேதாத்திரியம் பேசுகிறது.....

"மோனநிலையின் பெருமை யார் எவர்க்கு
முன்படர்ந்து வாயாலோ சொல்லக்கூடும்?
மோனமே அறிவினது அடித்தளம்ஆம்.
மிகவிரிவு! எல்லையில்லை! காலம் இல்லை!
மோனத்தில் அறிவு தோய்ந்து பிறந்தால்,
முன்வினையும் பின்விளைவும் நீக்கக் கற்கும்,
மோனநிலை மறவாது கடமை ஆற்ற,
மேன்மை, இன்பம், நிறைவு, வெற்றி அமைதியுண்டாம்." (ஞாக.பா.1640)

அறிந்து கொள்வதனால் அறிவு என்கிறோம். அறிவு வேறு உணர்வு வேறு. ஆத்மானுபவமே உணர்வு ஆகும். ஆன்மா உணர்ந்து கொள்வதனால் உணர்வு என்கிறோம்.

மோன நிலையில் இருப்பு இயக்கம் என்ற இரண்டு அற்ற நிலை உணரப்படும். அதன் பெருமையை சிறப்பை, உயர்வை யாரும், யாருக்கும் வாய் வார்த்தைகளால் சொல்லமுடியாது. அவரவர்கள் முயன்று உணரத்தான் முடியும்.

அறிவின் அடித்தளம் மோனநிலையாகும். எல்லை, காலம் என்பதை எல்லாம் கடந்து எல்லையற்றதும், மிக விரிவுடையதும் ஆகும்.

மோனத்தில் அறிவானது மூழ்கித் தோய்ந்து வெளிப்பட்டுப் பிறக்குமேயானால், பழைய பழக்கப் பதிவுகளான பாவ பதிவுகளை நீக்கக் கற்றுக் கொள்ளும். பதிவின் விளைவுகளை அனுபவித்து நீக்கி கொள்ளும்.

மோன நிலையில்; பழகிப் பழக, அந்நிலையினை மறவாமல் கடமைகளை கடமைக்காவே இயற்றுகிறபோது இரக்கம், துன்பம், நிறைவு, வெற்றி, அமைதி ஆகியவை மலர்ச்சி பெறும். இவையே மௌனநிலையின் சிறப்பும் பெருமையும் ஆகும்.

நாமும், நாள்தோறும் சில மணித்துளிகளாவது மாதந்தோறும் சில நாட்களாவது மௌனம் இருந்து குருவோடு உயிர்த்தொடர்பு பெற்று ஆனந்தமாக வாழ்வோமாக.

கற்றிலன் ஆயினும் கேட்க அஃதுஒருவற்கு
ஒற்கத்தின் ஊற்றாம் துணை (குறள் 414)

அவ்வாறு பெற்றுக்கொண்ட அறிவு, ஒருவர் தளர்ச்சி அடையும் காலத்தில் ஊன்றுகோல் உதவுவதுபோல உதவும்.
திருமூலர் அருளிய திருமந்திரத்துக்குப் புதிய பொருள் விளங்கித் தோன்றிற்று!

அறிவானும் அறிவிப்பானுமாகிய வாலறிவனே பேராசான்!
மனிதர்களுக்கு பொறி-புலன்கள் கொண்ட உடல் மூலம் அறிவை அறிவிக்கும் இறைவன், மனிதர்களுடன் தானும் அறிகின்றான்; அறியப்படும் அறிவாகவும் இருப்பதும் இறைவனே!

அவனே வானாகி, மண்ணாகி, வளியாகி, ஒளியாகி, ஊனாகி, உயிராகி, அறிகின்ற மெய்ப்பொருள் உண்மையுமாய் நிற்பவன் என்று காரைக்கால் அம்மையின் பாடல் நன்கு விளங்கிற்று!

கற்றதனால் ஆய பயன் என்கொல்! வாலறிவன்
நற்றாள் தொழார் எனின்?

குறள்வழி, அறிவானும், அறிவிப்பானும் தானேயாகிய வாலறிவனின் பேரருள் விளங்கிற்று!

ஆம் அன்பர்களே,

குருவின் அன்பு கருணை, நம்மை பெற்ற தாயின் அன்பைக் காட்டிலும் பலமடங்கு பெரியது என்கிறார் எழுத்துச்சித்தர் திரு பாலகுமாரன் ஐயா அவர்கள்.

தாய்கூட சிலநேரம் நம் மகன் மகள்தானே என்று அன்பின் அடிப்படையில் விட்டுவிடக்கூடும், ஆனால் குரு நாம் மேன்மை நிலை அடையும் வரை ஊக்கமாகவும், ஆக்கமாகவும், சூட்சுமமாக ஒவ்வொரு கணமும் துணைநின்று வழித்திநடத்திச் செல்பவர் குரு...

*குருவின் திருவடிகளே சரணம்!*
ஆம்,
அப்பன் தாயுமானவரின் திருவடி வணங்கி...
அருட்தந்தை வேதாத்திரி மகரிஷி அவர்களின் திருவடி வணங்கி...
திரு மன்னார்குடி பானுகுமார் ஐயா அவர்கள் திருவடி வணங்கி....

இந்நூல் அனைவரையும் சென்றடையும் என்று நல்வாழ்த்துகளை கூறி அன்புடன் நிறைவு செய்கிறேன்...

அன்புடன்-
ஓவியர் இரா.செல்லப்பா,

"நெஞ்சகமே கோயில் நினைவே சுகத்தம்அன்பே

மஞ்சனநீர் பூஜைகொள்ள வாராய் பராபரமே."

# தாயுமானவரின் குரு மௌனகுரு

தமிழில் நவீன யுகத்தின் முன்னோடியாக விளங்கிய மகாகவி பாரதியார், தனக்கு முன்பிருந்த இரண்டாயிரமாண்டுக் காலத் தமிழ் இலக்கிய மரபை முழுவதுமாக கண்மூடித்தனமாக வழிபடுபவராக இருக்கவில்லை.

விமர்சன நோக்குடனேயே அதனை அணுகினார். 'யாமறிந்த புலவரிலே கம்பனைப் போல், வள்ளுவன் போல், இளங்கோவைப் போல் என்று அவர் அளித்த தரவரிசை அதற்கு முன்பு வேறு யாரும் செய்திராதது.

இந்த மூன்று கவிஞர்களையும்தான் தமிழிலக்கியத்தின் உச்சங்களாக மீண்டும் மீண்டும் பல கவிதைகளில் பாரதியார் முன்வைத்துக் கொண்டே இருந்திருக்கிறார்.

இவர்களோடு பாரதியார் பெரிதும் மதித்துப் போற்றிய மற்றொரு மகத்தான தமிழ்க்கவி என்றால் அது தாயுமானவர்தான்.

என்றும் இருக்க உளம்கொண்டாய்
இன்பத் தமிழுக்கு இலக்கியமாய்
இன்றும் இருத்தல் செய்கின்றாய்
இறவாய் தமிழோடு இருப்பாய் நீ!
'ஒன்று பொருள்; அஃது இன்பம்' என
உணர்ந்தாய் தாயுமானவனே
நின்ற பரத்து மாத்திரமோ
நில்லா இகத்தும் நிற்பாய் நீ! (பாரதியார்)

தாயுமானவர் பாடல்களின் தத்துவச் செழுமையும், வாழ்க்கை நோக்கும், கவித்துவமும் பாரதியாரை முழுமையாக ஆட்கொண்டன.

தமிழ்ச் சிந்தனை மரபில் இத்தகைய உயர் இடத்தை அவருக்கு பாரதி அளித்திருப்பதற்கு இதுவே காரணம்.

விஜயரங்க சொக்கநாதர் என்ற நாயக்கர் மன்னன் திருச்சியைத் தலைநகராகக் கொண்டு ஆண்டு வந்தார்.

அவரிடத்தில் தலைமைக் கணக்கராகப் பணியாற்றியவர் கேடிலியப்பர். இவருக்கும் கெஜவல்லியம்மைக்கும் இரண்டாவது மகனாகத் தோன்றியவர் தாயுமானவர். இவர் தம் ஐந்தாம் வயதில் சிற்றம்பல தேசிகரிடம் தமிழ் கற்றார். வடமொழிப் புலமையும் கைவரப் பெற்றார்.

## அதுவரை சும்மா இரு

ஒருநாள் தாயுமானவர் திருச்சி மலைக்கோட்டை சுவாமியை தரிசனம் செய்துவிட்டுத் திரும்பினார்.

1. தாயுமானவரும் மௌனகுருவும்.




ராஜம் பதிப்பகம் Ebook Publishers

அப்போது திருத்துறையூர் மௌனகுரு சுவாமிகள் தவநிஷ்டையில் இருந்தார். அச்சுவாமிகளது அருட்பார்வையை வேண்டி அவரை வணங்கி நின்றார் தாயுமானவர். திருமூலர் வழிவந்த மௌனகுரு இவருக்குக் குருவாக வந்து ஆட்கொண்டார்.

அன்று முதல் குருநாதருடனே தங்கி இருக்கலானார். பலநாள் பழகிய குரு இவரை விட்டுப் பிரியும் நிலை ஏற்பட வருத்தமுற்றார்.

அப்போது குருநாதர் தாயுமானவரிடம், ‘நீ உன் கர்மவினைகள் நீங்க இல்லறம் ஏற்று மீண்டு வா. அதுவரை சும்மா இரு’ என்றருளிப் பிரிந்தார்.

மௌனகுருவை பற்றி 160 வரிகளில் பத்துப் பாடல்களை “மௌனகுரு வணக்கம்” என்றை தலைப்பில் தாயுமானவர்

பாடியுள்ளார். இப்பாடல்களை வேதாத்திரியப் பார்வையில் இனி சிந்தித்து மகிழ்வோம்.

# ஞானமாகிய மதம் பிடித்த யானை

**ஞானம்** என்பது ஒரு 'அறிவுபூர்வமான புரிதல்' (Intellectual Understanding) மட்டுமே. எல்லாம் அவன் செயல் - நம் மனதில் தோன்றும் இன்ப துன்பங்கள் எல்லாம் அவன் செயல் என்று பக்தி மார்க்கம் போதிக்கும் சரணாகதியும், இந்த அகசரணாகதி தான். இந்த உண்மையை எவரும் கடை பிடித்து புரிந்து கொள்ள முடியும்

ஞானம் என்றால் மெய்ப்பொருளை உள்ளது உள்ளபடியே அறிவது ஆகும். ஞானம் என்பதற்கு "வீடு பயக்கும் உணர்வு" என்கிறார் பரிமேலழகர்.

சிந்தையும் செயலும் இணைந்ததே மனிதம் என்பார்கள். சிந்தைக்கு வேண்டியது இறையுணர்வு. செயலுக்கு வேண்டியது அறநெறி. சிந்தை, மூலத்தை நினைக்க வேண்டும்.

மூலத்தைப் பற்றிய முழுமையான அறிவு சிந்தையில் இல்லையேல், ஞாலத்தைப் பற்றிய ஞானம் கிடைத்தல் அரிது. ஞானமில்லவாத வாழ்வு இருட்டறையில் நடப்பது போன்று,

கடவுளைப் பற்றிக் கொண்டு இந்தப் பிறவியோடு நம் கணக்கை முடித்துக் கொள்ள வேண்டும். முக்தி பெற வேண்டும். ஆன்ம விடுதலை பெறவேண்டும் என்ற உணர்வு யாருக்கு வருகிறதோ அந்த உணர்வே ஞானம் எனக் கூறப்படுகிறது.

"நினது திருவருள் பதிந்த கூட்டத்தார்க்கு நடுவே, என்னை ஒரு ஞானமாகிய மதம் பிடித்த யானையாக வளர்த்து விட்டாய்!" என்று தாயுமானவர் இந்தப் பாடலில் பாடியுள்ளார்.

ஆசைநிக ளத்தினை நிர்த்துளி படஉதறி,

ஆங்கார முளையை ஏற்றி,
அத்வைத மதம் ஆகி, மதம்ஆறும் ஆறுஆக
அங்கையின் விலாழிஆக்கிப்,

பாசஇருள் தன்னிழல் எனச்சுளித்து ஆர்த்து மேல்
பார்த்துப் பரந்த மனதைப்
பாரித்த கவளமாய்ப் பூரிக்க உண்டு, முக
படாம் அன்ன மாயை நூறித்,

தேசுபெற நீவைத்த சின்முத்தி ராங்குசச்
செங்கைக்கு உள்ளே அடக்கிச்
சின்மயா னந்த சுக வெள்ளம் படிந்து, நின்
திருஅருள் பூர்த்தியான

வாசம் உறு சற்சார மீது என்னை ஒருஞான
மத்த கசம் எனவளர்த்தாய்.
மந்த்ர குரு வே யோக தந்த்ரகுரு வேமூலன்,
மரபில்வரும் மௌன குருவே. (தா.பா.37)

- ஆசைகளாகிய சங்கிலியை அறவே அழியும்படி செய்து,
- அகங்காரமாகிய முளையை (யானை கட்டும் தறியை) பிடுங்கி எறிந்து,
- அத்வைதத்தை மதமாகப் போதித்து,
- அறுவகைச் சமயங்களும் ஆறு நதிகளாய் துதிக்கையின் உமிழ் நீராக்கி,
- ஆணவமல இருளைத் தனது நிழல் எனச் சினந்து,
- ஆரவாரம் செய்து,
- பரந்த மனம் என்பதைப் பெரிய கவளமாக்க,
- மிகுதிபட உண்டு,
- முகபடாம் என்னும் மாயையை விலக்கி,

- புகழ் பெறுமாறு நீ காட்டிய சின் முத்திரை என்னும் அங்குசம் தாங்கிய சிவந்த கைக்குள்ளே அடங்குமாறும், ஞானமயமான பேரின்ப வெள்ளத்தில் முழ்குமாறும் செய்து,

நினது திருவருள் பதிந்த கூட்டத்தார்க்கு நடுவே, என்னை ஒரு ஞானமாகிய மதம் பிடித்த யானையாக வளர்த்து விட்டாய்!

(இங்கு ஆசை சங்கிலியாகவும், அகங்காரம் முளைக்குச்சியாகவும், அத்துவிதம் மதமாகவும், மதம் ஆறும் துதிக்கையின் உமிழ்நீராகவும், ஆணவமலம் நிழலாகவும், மனம் கவளமாகவும். மாயா மலம் முகபடாமாகவும், சின்முத்திரை அங்குசமாகவும், உயிர் யானையாகவும் உருவகம் செய்யப்பட்டுள்ளது,)

மூலத்தைப் பற்றிய ஞானத்தைத் தருகிற வேதாத்திரியத்தின் இறைத் தத்துவம் நமக்கு முக்தியைத் தரவல்லது.

ஞாலத்தின் மூலத்தினை உணர்ந்து அதன் தன்மைகளை ஆராய்ந்தறிவது ஞானத்தின்முதல்நிலை.

அத் தன்மைகளுடைய மூலம் எவ்வாறு ஞாலமாகிறது என்னும் தன்மாற்றச் சரித்திரத்தைத் தெளிந்து உணர்வது ஞானத்தின் இரண்டாம் நிலை.

ஞானத்தின் இருநிலைகளையும் கடந்து, எள்துனையும் பேதமுறாது எவ்வுயிரும் தம்முயிர்போல பாவித்து அனைத்துயிருக்கும் ஒத்தும் உதவியும் வாழ்கின்ற பக்குவத்தைப் பெறுதல் ஞானத்தின் மூன்றாம் நிலை.

ஞானத்தின் மூன்றாவது நிலையில் மனித அறிவு முழுமையடைகிறது. "அறிவின் முழுமை அது முக்தி" என்பது வேதாத்திரியம். இதை நாம் முயன்று முயன்று அடைய வேண்டிய நிலை. தாயுமானவர் இந்த நிலையை அடைந்தார்.

ஞானம் என்றால் என்ன? வேதாத்திரியம் பேசுகிறது......

"ஞானம் என்றால் மனஇயக்க இயல்பறிந்து,

நான் என்ற இயற்கைத் தத்துவம் உணர்ந்து,

மோனமென்ற ஒன்றாயும், மோகமாதி

மூவிரண்டு குணங்களாய்ப் பரிணா மத்தால்

ஆனபொருள் அனைத்திலும், நான் அறிந்து நிற்கும்

அளவாயும் அமையும் அறிவெல்லை கண்டு

மானம் மரியாதை, உடல்ஒழுக்கம் காத்து,

மனிதரிடை மனிதராய் வாழ்தல் ஆகும்." (ஞாக.பா.1387)

ஞானம் என்பது பொதுவாக அறிவு என்று சொல்லப்படுகிறது. தனது அறிவை அறிந்து. அந்த அறிவின் விரிவில் தன்னையே எல்லாவற்றிலும் தன்னிலேயே எல்லாவற்றையும் அறியக்கூடிய ஆறாவது அறிவைப் பெற்றவன் மனிதன்.

ஆகவே அறிவை அறிவால் அறியப் பழகுதல் ஞானம் எனலாம். அறிவை அறிய வேண்டுமானால் முதலில் மனதையும், அதன் இயக்கத்தையும், இயல்பையும் அறிய வேண்டும்.

மனதின் அடித்தளமாக அறிவாக இருப்பதே நானாகவும் தெய்வமாகவும் உள்ளது என்னும் இயற்கைத் தத்துவத்தை உணர வேண்டும்.

அந்நிலையில் மௌனம் என்ற ஒன்றே பேராசை, சினம், கடும்பற்று. முறையற்ற பால்கவர்ச்சி, வஞ்சம் என்ற ஆறு துர்குணங்களாக மனம் என்ற இயக்கத்தின் தன்மாற்றத்தில் வெளிப்படுவதை உணரலாம்.

அந்த மௌனம் என்ற ஒன்றே பிரபஞ்சத் தோற்றங்களாகி சடம், சீவன் என்ற இயக்கமாகி இருப்பதையும் உணரலாம்.

தன்னுள் அறிவாக இருந்து இயக்கிக் காத்து முடித்து வைப்பதைப் போல எல்லா மனிதரிலும் சீவனிலும் உணரலாம்.

அந்நிலையில் தனது அன்பு, அந்தஸ்து அல்லது மதிப்பு. உடல் ஒழுக்கம் ஆகியவற்றை சரியான முறையில் காத்து மனிதர்களுக்கு இடையில் தனது வாழ்க்கைக்காக பிற உயிரைத் துன்புறுத்தாமலும் துன்பப்படும் உயிர்களுக்குத் துன்பத்தை நீக்க இயன்ற அளவில் உதவியும் மனிதராக வாழ்தலே ஞானம் எனப்படும் என்பது வேதாத்திரியம்.

முயற்சி அளவே ஞானம்

தொட்டனைத் தூரும் மணற்கேணி – வள்ளுவர்.

விதை, நிலம், எரு, தண்ணீர். காவல் இவைகள் அனைத்தும் சரியாக இருந்தால் தான் விளைவு நன்றாக இருக்கும்.

அதுபோல ஓர் ஆசான் அத்வைத தத்துவம் என்ற ஒருமைத் தத்துவ விதையை உள் அறிவு என்றும், நிலத்தில் ஊன்றினால் அது வளர்ச்சி பெற, நீ ஒழுக்கம் என்ற உரம் இடம் வேண்டும்.

அறிவை ஒன்றிப் பழகும் ஒருமைப் பழக்கமான தவமும் ஆராய்ச்சி என்ற தண்ணீரும் பாய்ச்ச வேண்டும்.

அறிவை ஒன்றச் செய்து உறுதியான அசைவு அற்ற நிலையடைவதே ஞானத்திற்குத் தேவையாக இருக்கிறது.

ஆகையால், அறிவு சலனப்பட்டுக் காம, குரோதம், லோபம், மோகம், மதம், மாச்சரியம் என்னும் ஆறு குணங்களில் எதுவாயும் மாறாது பார்த்துக் கொள்ளும் விழிப்பு நிலையாகிய காவல் புரிய வேண்டும்.

இவைகள் எல்லாம் அமையும் வகைக்கும் அளவிற்கும் ஏற்றபடி ஞானம் என்ற விளைவும் நமக்கு உண்டாகும்.

## இல்லத்தாருக்கு ஞானம் கிடைக்குமா?

தாயுமானவருக்கு கிடைத்த இந்த ஞானநிலை இல்லத்தில் வசிப்பவருக்கும் கிடைக்கும் என்று உறுதிபட வழிகாட்டுகிறது வேதாத்திரியம்.

“ஞானநிலை இல்லத்தில் வாழ்வோர் கட்கு

நல்லதல்ல, கிட்டாது, வேண்டு வோர்க்கு

கானகமே தகுதி” எனவும் கற்பித்த,

கருத்தேற்ற காலமது மாறிப் போச்சு!

மோனநிலையில் இருந்த இயற்கை ஒன்றே

முடிவாக, மனித அறிவின் உயர்வில்

தானடைந்த பரி ணாமமே பிரபஞ்ச

தத்துவங்கள் என்றறிந்தோர் பெருகி விட்டார்!” (ஞாக.பா.1384)

தனது உடலுக்குள் உயிர், உயிர்க்குள் அறிவு, அந்த அறிவே தெய்வமாகவும் உள்ளது. தனக்குள் இருந்து இயக்கிக் காத்து முடித்தும் வைக்கிறது என்பதை உணரும் போது,

எல்லா மனிதரிலும், சீவ இனங்களிலும் சடப் பொருட்களிலும் அதே அறிவு இருப்பதை உணரும் போது எந்த உயிரோடும். பொருளோடும் இணக்கத்துடன் தொடர்பு கொண்டு வாழலாம்.

ஆகவே அறிவை அறிவால் அறிந்த தெளிவு தான் ஞானம். முற்காலங்களில் இல்லறம் மேற்கொண்டவர்களுக்கு ஞானநிலை, ஏற்புடையதல்ல.

ஞானம் இல்லறத்தாருக்குக் கிட்டாது. அந்நிலையினை வேண்டுபவர்களுக்குக் காடுகள் தான் தகுதியானது என்று முற்காலத்தில் கற்பித்தனர். . அக்கருத்தையும் ஏற்றுக் கொண்டார்கள்.

ஆனால் காலம் மாறி விஞ்ஞானயுகத்தில் மனிதர்கள் வாழ்ந்து கொண்டுள்ளனர்.

இருப்பாக மௌன நிலையிலிருந்த இயற்கை என்ற ஒன்றே தன் நிலையில் மாற்றம் பெற்று பிரபஞ்ச தோற்றங்களாகி முடிவாக அறிவின் உயர்வில் மனிதனாகவும் ஆகியுள்ளது என்ற தத்துவங்களை அறிந்தவர்கள் பெருகிவிட்டார்கள்.

ஆகவே முற்காலத்தில் இதுபற்றி வழங்கப்பட்ட கருத்துக்கள் அறிவிற்கு பொருத்தமாக இல்லாததால் மாறிக் கொண்டுள்ளது.

# உய்வித்த குருவே வாழ்க

“எனக்கு ஞான உபதேசம் செய்த சத்குரு எவரோ அவரே ஈஸ்வரன் – அவரே தேவன் – அவரே பந்து – அவரே ஆத்மா – அவரே ஜீவன் – அவரை விட அன்னியோன்னியமானதும், ஸ்ரேஷ்டமானதும் ஏதும் இல்லை.

நான்கு வேதம் – ஆறு சாஸ்திரம் – சப்தகோடி மஹா மந்திரங்கள் – யந்திரங்கள் – தெரிந்ததினால் பிரம்மஞானம் பெற்றவன் என்று கூறிவிட முடியாது. சற்குரு கடாட்சம் கிடைத்தால் தான் பிரம்மஞானம் பெற இயலும்.” (சாந்ததோக்கிய உபநிடதம்)

குரு என்பவர் சாட்சாத் அந்தப் பரம்பொருளின் மறுவடிவம் தான். இது மிகைப்படுத்தப்பட்ட வார்த்தையோ, புகழ்ச்சியோ அல்ல.

கடவுள் + பாவப்பதிவுகள் = மனிதன் என்றால், மனிதன் – பாவப்பதிவுகள் = கடவுள் – தானே. அப்படி தன் பாவப் பதிவுகளை ஆண்டாண்டு காலமாகி தனது கடினமான முயற்சியால், பயிற்சியால் கழித்தவர்கள் தாயுமானவரும் வேதாத்திரி மகரிஷியும் ஆவார்கள்.

குருவும் இறைவனும் ஒன்றாக கருதிய தாயுமானவர், அவரின் இலக்கணத்தைக் கூறுகிறார். இறைவனே குருவாக வந்ததாக சொல்லுகிறார்.

குரு பிரம்மம். ஆச்சாரியார் – (குரு)

அகத்தவத்தின் மூலமான பிரம்மத்தையும், தன் ஆன்மாவையும், மெய்ஞ்ஞானத்தையும், இயற்கையையும், விஞ்ஞானத்தையும் உணர்ந்த, உயர்த்த வல்ல ஞானிகளையே நாம் ஆச்சாரியார் என்றும் குரு என்றும் அழைக்கின்றோம்.

ஏனென்றால் “கு” என்ற எழுத்திற்கு “இருள் என்றும், “ரு” என்ற எழுத்திற்கு “வெளிச்சம்” என்றும் பெரியோர்கள் விளக்கம் தருவர்.

இத்தகைய ஞானிகளே சிற்றறிவின் துணை கொண்டு சிற்றின்பத்தில் திளைத்துக் கொண்டு இருக்கும் உலக மக்களை தன் ஆத்ம பலத்தால் அவர்களின் சிறறிவை மெய்யறிவாக மாற்றும் வித்தையை உபதேசித்து அதன் மூலம் பேரின்பத்தை (வீடுபேறு) அடையச் செய்யும் ப்ரத்யக்ஷ தெய்வமே குரு ஆவார்.

“தப்பாது குரு உயர்வை மதிப்போர் தம்மைத்

தரத்தில் உயர்த்திப் பிறவிப் பயனை நல்கும்”

இதனையே வேதமும்” ஆச்சார்யோ தேவா பவ”, அதாவது தெய்வமே குரு வடிவத்தில் உள்ளது. திருமூலரும்,

“தெளிவு குருவின் திருமேனி காணல்

தெளிவு குருவின் திருநாமம் செப்பல்

தெளிவு குருவின் திருவார்த்தை கேட்டல்

தெளிவு குருவின் திருவுரு சிந்தித்தல் தானே”

என்று கூறுகிறார்.

தாயுமானவர் அரசரிடம் அமைச்சராக இருந்தார். இளமையிலேயே வடமொழி. தமிழ்மொழி, உட்பட வேதங்களையும் இலக்கியங்களையும் கசடறக் கற்று புலமைப் பெற்றிருந்தார்.

தாயுமானவர் ஆலயத்தில், அவர் ஒரு குருவை சந்திக்கிறார். அவர் இவரை “சும்மா இரு” என்று உபதேசித்துச் செல்கிறார். அதனால் தாயுமானவர் குருவுக்கு, மௌனகுரு என்று பெயர்.

மௌனகுரு என்றால் பேசமாட்டார் என்று பொருள் அல்ல. அதிகம் பேசமாட்டார். அளவாகப் பேசுவார். மிதமான சொற்களைத் தான் பேசுவார்.

தாயுமானவர் குருவிடம் இறைவனைக் காண்கிறார். குரு மௌனமாக இருந்து, சொல்லாத வார்த்தையை சொன்னார் என்று கூறுகிறார்.

பிரபஞ்சம் அல்லது பிரகிருதியாகத் தோன்றிய நிலையில் சான்றோர்கள் வாக்கு மூலமாகவும், பிரபஞ்ச நிகழச்சிகள் மூலமாகவும் நமக்கு உபதேசம் செய்கின்றார்.

மனத்தை மாற்றக் கூடிய சொல்லுக்கு மந்திரம் என்று பெயர். மந்திரஜபம் மனத்துக்குள் நிகழும் பொழுது மனத்திலுள்ள கேடுகள் எல்லாம் அழிகின்றன.

மந்திரத்தை வாய்விட்டுச் சொல்லுதலை ஸ்தூலஜபம் என்கிறோம். அதற்குச் சக்தி குறைவு. ஓசை வெளிவராது.

உதடு மட்டும் அசைகின்ற பாங்கில் மந்திர ஜபம் நிகழும்பொழுது அதற்கு ஸ்தூல ஜபத்தை விடச் சக்தி அதிகம்.

உதடும் அசையாது உணர்வுடன் மனத்துக்குள் மந்திரஜபம் நிகழும் பொழுது அது மிக சக்தி வாய்ந்தது ஆகிறது.

அப்படி மனதுக்குள் ஜபிக்கின்ற மந்திரத்தைத்தான் "சொல்லாத வார்த்தை" என்று தாயுமானவர் குறிப்பிடுகின்றார்.

மனதை மகோன்னத நிலைக்கு எடுத்துச் செல்கின்ற மகாமந்திரத்தை மௌன குருவானவர் தம் மனதுக்கு உபதேசித்த குருவின் மாபெரும் கருணையை, அன்பை தாயுமானவர் உணர்ந்தார்.

பேரின்பத்தைப் பெறுவதற்கு மௌனகுரு தமக்கு மந்திரோபதேசம் செய்த இரகசியத்தை ஆனந்தக்களிப்பில் தாயுமானவர் வெளியிடுகின்றார்.

தாயுமானவர் சொல்கிறார்..... நான் (உயிர்) அதுவாய் (இறையாய்) இருக்கும்படி நீ (குரு) செய்த அதிசயம் மிகவும் நன்றாக இருக்கிறது என்று குருவைப் புகழ்கிறார் இந்தப் பாடலில்.

ஐந்துவகை ஆகின்ற பூதமுதல் நாதமும்
　　அடங்கவெளி யாக வெளி செய்து

அறியாமை அறிவுஆதி பிரிவாக அறிவார்கள்
அறிவுஆக நின்ற நிலையில்

சிந்தைஅற நில் என்று சும்மா இருத்தி. மேல்
சின்மயா னந்தவெள்ளம்
தேக்கித் திளைத்து, நான் அதுவாய் இருக்கநீ
செய்சித்ரம் மிகநன்று காண்.

எந்தைவட ஆல்பரம பரம குருவாழ்க! வாழஅரு
ளியநந்தி மரபு வாழ்க!
என்று அடியர் மனமகிழ, வேத ஆக மத்துணிபு
இரண்டு இல்லைஒன்று என்னவே

வந்த குருவே! வீறு சிவஞான சித்திநெறி
மௌன உபதேச குருவே!
மந்த்ர குருவே யோக தந்த்ரகுருவே மூலன்
மரபில்வரும் மௌன குருவே." (தா.பா.87)

- ஐம்பூதங்கள் முதல் நாதம் ஈறாகச் சொல்லப்பட்ட முப்பத்து ஆறு தத்துவங்களும் வெளிப்டையாக விளங்குமாறு செய்து,
- இருள் நிலையில் அறியாமையும்,
- மருள் நிலையில் சுட்டறிவும்,
- அருள் நிலையில் வேறு என்றும் கண்டு அறிய வல்லார்,
- அறிவு உருவாக நின்ற நிலையில்,
- மனம் அடங்கி நிற்பாயாக என்று கூறி,
- வாளா இருக்கும்படி செய்து,
- அதன் மேலும் அறிவுமயமான பேரின்பப் பெரு வெள்ளத்தில் திளைக்குமாறு செய்து,

- நான் (உயிர்) அதுவாய் (இறையாய்) இருக்கும்படி நீ (குரு) செய்த அதிசயம் மிகவும் நன்றாக இருக்கிறது.

எமக்குத் தந்தையும், வடஆல மரத்தின் கீழ் எழுந்தருளி இருப்பவரும். எமது குருவுக்கும் குருவானவரும் ஆக விளங்கும் தட்சிணாமூர்த்தி வாழ்க! அவரின் வழிநின்று, நாங்கள் வாழ அருள்செய்த, நந்தி பரம்பரை வாழ்க.

குரு என்னென்ன அதிசியங்கள் செய்வார் என்பதை வேதாத்திரியமும் பட்டியலிடுகிறது.

"புருவத்திடை உந்தன் பூவிரலால் தொட்டு.எந்தன் உயிருணர்த்தி
புன்செயல்கள் பதிவழிந்து, பூர்வநிலை அறிவறிய துரியம் தந்து;
கருவறிந்து அகத்தவத்தால் களங்கங்கள் போகப் பெருங்களத் தமர்த்தி
கருத்துடனே விளைவறிந்து ஐந்து புலனையாளுங் கலை போதித்து;
உருவத்தில் உயிரை, உயிர்க்குள் உள்ளமெய்ப் பொருளை அறிவைக்காட்டி
ஒழுக்கத்தால் உலகினையே நட்புக் கொள்ளும் அன்புநெறி
விளங்கவைத்து:
திருத்தமொடு காயகற்பம், சீர்கர்மயோகம், உடற்பயிற்சி தந்து
சிந்தனையை, உடல்நலத்தைச் சீரமைத்து உய்வித்த குருவே வாழ்க."
(ஞாக.பா.8)

வாழ்வின் நோக்கம் இனிமையாக வாழ்தல். இயற்கையில் எல்லாமே இனிமைதான். கோடான கோடிப் பிறவிகளில் ஏற்பட்ட ஆன்மக் களங்கங்களால் மனிதன் பிறவிப் பிணியில் துன்புறுகிறான்.

பழக்கப் பதிவுகளால் உணர்ச்சிவயப்பட்ட நிலையில் வாழ்ந்து பெற்ற களங்கங்களிலிருந்து விடுபட்டு தெய்வீகத்தை வெளிப்படுத்தி தானும் வாழ்ந்து, மற்றவரையும் வாழ வைக்கக்கூடிய ஆறாவது அறிவானது குறையறிவாக இருக்கும் வரை இனிமையாக வாழ முடியாது.

அதிலிருந்து விடுபட குருமகானின் உயிர்க்கலப்பு உபதேசத்தின் மூலம் உதவுகிறது.

மனம்தான் மனிதனாயிருக்கிறது. மனதை ஒருமுகப்படுத்த மனதிற்கு மூலமான உயிர்மேல் மனம் செலுத்திப் பழக வேண்டும்.

மூலாதாரத்தில் தேங்கிக் கிடக்கும் உயிர்ச்சக்தயின் ஒரு பகுதியை ஸ்பரிச தீட்சையின் மூலம் மேலெழுப்பிட இரு புருவ மையமாகிய ஆக்கினை சக்கரத்தில் நிறுத்தி தியானிக்கச் செய்கிறார் குரு.

அதன் மூலம் விளைவறிந்த விழிப்பு நிலையால் இனிப் பழிசெயல் புரியாத தகமை இயல்பாகிறது.

அதன்பின் மனிதனின் ஆதி நிலையை உணர்த்த, அறிவை அறிய, சட்சு தீட்சையின் மூலம் துரிய தவம் கொடுப்பதன் மூலம் மன அமைதி கிட்டுகிறது.

- புறமனதை நடுமனம் வெற்றி கொள்தால், ஏற்கனவே செய்த பழக்கப் பதிவுகளை அழித்து மனவலிமை பெறமுடிகிறது.

- துரிய தவம் பழகப்பழக மனதின் விரியும் தன்மையால், இறை இணைப்பாகிய பெருங்களத்தில் துரியாதீதமும் கைவரப் பெறுகிறது.

- முன்வினைப் பதிவுகளின் விளைவுகள் வெளிப்படும்போது அவற்றை எதிர்கொள்ளும் திறன் கூடுகிறது.

- பொறி புலன்களும், மனமும் அறிவின் கட்டுக்குள் வந்துவிடுகிறது.

- உடலுக்குள் உயிர், உயிர்க்குள் அறிவு, அந்த அறிவுதான் தெய்வம்.

- அதுவே எல்லாமாக எல்லாவற்றுக்குள்ளும் உள்ளது என்பதைக் காட்டிக் கொடுப்பவர் குரு.

- துன்பப்படுத்தாத வாழ்வியல் மூலமாக உலக முழுவதும் நட்பு பாராட்டக்கூடிய இறையுணர்வாகிய அன்பு நெறியை உணர்ந்து

கொள்வதற்கு காயகல்பம், கர்மயோகம், உடற்பயிற்சி முதலியவற்றை அருளியவர் குரு.

இத்தகைய அதிசியங்கள் செய்து, நமது உடல்நலத்தையும் உயிர் வளத்தையும், மனவளத்தையும் மேன்மைப்படுத்திய குருவை வணங்குவோம் வாழ்த்துவோம். வாழ்க வளமுடன்.

# மறப்பதும் பின் நினைப்பதுமே மாயை-ஞானம்

சிறந்தவர்களாக, அனைத்து வேதங்களையும் கற்றுணர்ந்தவர்களாக, முற்றும் துறந்த முனிவர்களாக இருந்தாலும், பிறவி என்று ஒன்று எடுத்து விட்டால், அதன் கர்மங்களிலிருந்தும், மாயைகளிலிருந்தும் விடுபடவே முடியாது.

இது குறித்து, தேவி பாகவதம் எனும் நூலில், மகா விஷ்ணுவே, நாரதருக்கு, ஞான உபதேசம் செய்துள்ள சம்பவம் ஒன்று.

மகாவிஷ்ணுவை தரிசிப்பதற்காக, பாற்கடலுக்குச் சென்றார் நாரதர். அவரைப் பார்த்ததும், மகாவிஷ்ணுவின் அருகில் இருந்த மகாலட்சுமி, நாணத்தோடு உள்ளே சென்று மறைந்து விட்டார்.

நாரதருக்கு மனம் பொறுக்கவில்லை. 'பரந்தாமா... என்ன இது! நான் பொறி, புலன்களையும், ஆசை, கோபம் போன்ற மாயைகளை வென்றவன்; அப்படிப்பட்ட என்னைப் பார்த்து, லட்சுமிதேவி ஏன் வெட்கப்பட்டு மறைய வேண்டும்...' என்றார்.

நாரதரின் கர்வம் கண்டு, நாராயணன் சிரித்தபடியே, 'நாரதா... மாயையை, யாராலும் வெல்ல முடியாது; வென்றவர்கள், இப்படி வெளியில் சொல்லிக் கொள்ள மாட்டார்கள்.

உருவமில்லாத காலமும், மாயைக்கு உருவமாக இருக்கிறது. காலமும், மாயையும் சேர்ந்து செய்யும் விளையாட்டை, அறியவோ, வெல்லவோ முடியாது...' என்றார்.

நாரதர் விடவில்லை. 'மாயையைப் பற்றி, ஆழமாக அறிய ஆசைப்படுகிறேன்; மாயையை எனக்குக் காட்டுங்கள்...' என்றார்.

'சரி, வா...' என்று கூறி, நாரதரை ஓர் அழகான குளத்திற்கு அழைத்துச் சென்ற மகாவிஷ்ணு, 'இக்குளத்தில் நீராடி விட்டு வா...' என்றார்.

அதன்படியே, குளித்து, கரையேறிய போது, பெண்ணாக உருமாறியிருந்தார் நாரதர். பெண்ணாக மாறியிருந்த நாரதரை, காலத்வஜன் என்ற மன்னன், மணந்து கொண்டான்.

நாரதருக்கு பழைய நினைவுகள் ஏதுவும் நினைவில் இல்லை. இத் தம்பதிகளுக்கு ஓர் ஆண் குழந்தை பிறந்தது. அக்குழந்தைக்கு வீரவர்மன் என்று பெயர் சூட்டினர்.

அப்படியே, 12 பிள்ளைகள் பிறக்க, பேரன், பேத்திகள் என, குடும்பம் பெரிதானது. அரச போகத்துடன், இல்லற வாழ்க்கையில் திளைத்திருந்தார் நாரதர்.

திடீரென்று போர் மூண்டது; கணவன், பிள்ளைகள், பேரன்கள் என, அனைவரும் மடிந்தனர்.

அப்போது, மகாவிஷ்ணு கிழ வேதியராக வந்து, 'பெண்ணே... இறந்தவர்களுக்கான கர்மாவைச் செய்ய வேண்டும்; அதற்காக, குளத்தில் மூழ்கி எழ வேண்டும்...' என்று கூறி, பெண்ணாக இருந்த நாரதரை அழைத்துக் கொண்டு, புருஷ தீர்த்தம் எனும் தடாகத்திற்குச் சென்றார்.

அத்தடாகத்தில் மூழ்கி எழுந்தவுடன், பழைய உருவத்திற்கு மாறியிருந்தார் நாரதர். எதிரில் இருந்த கிழவேதியர் மறைந்து, அங்கே மகாவிஷ்ணு இருந்தார்.

'நாரதா... மாயை குறித்து இப்போது அறிந்து கொண்டாயா...' என்றார். வேத, வேதாந்தங்கள் அறிந்து, பொறி, புலன்களை வென்று, ஆசை, கோபம், மாயைகளை அடக்கியதாகப் பெருமை பாராட்டிய நாரதர், வாய் மூடி, மகா விஷ்ணுவை பின் தொடர்ந்தார்.

மாயையை வெல்வதற்கு உரிய ஒரு வழி வகையை நீ எப்பொழுது தந்து அருளப் போகிறாய்? கூறுவாயாக! என்று தாயுமானவர் இப்பாடலில் கேட்கிறார்.

உயிர்களின் தோற்றமே மாயை எனும், பிம்பங்களால் ஆனது; இதில், அனைத்தையும் அறிந்து விட்டோம் என்று நமக்குள் எழும் ஆணவம் கூட, மாயை தான் என்பதை, அறிந்து தெளிய வேண்டும்.

அனைத்தும் மாயையின் சொரூபம் என்பது தெரிந்து விட்டால், நம்மிடம் இருக்கும், ஆணவம், கோபம், வெறுப்பு, விரோதம், கயமை அத்தனையும் மறைந்து, சக மனிதரை நேசிக்கும் பண்பு நமக்குள் ஏற்படும்.

ஆதிக்கம் நல்கினவர் ஆர் இந்த மாயைக்கு? என்
அறிவு அன்றி இடமில்லையோ?
அந்தரப் புஷ்பமும் கானலின் நீரும், ஓர்
அவசரத்து உபயோகமோ?

போதித்த நிலையையும் மயக்குதே, அபயம்நான்
புக்கஅருள் தோற்றிடாமல்
பொய்யான உலகத்தை மெய்யா நிறுத்தி என்
புந்திக்குள் இந்த்ரசாலம்

சாதிக்குதே இதனை வெல்லவும் உபாயம் நீ
தந்து அருள்வது என்று புகல்வாய்?
சண்மத ஸ்தாபனமும் வேதாந்த சித்தாந்த
சமரசநிர் வாகநிலையும்,

மாதிக்கொடு அண்டப் பரப்பு எலாம் அறியவே
வந்து அருளும் ஞானகுருவே!
மந்த்ர குருவே யோக தந்த்ரகுருவேமூலன்
மரபில் வரும் மௌன குருவே." (தா.பா.39)

- மாயைக்கு இவ்வளவு அதிகாரத்தை வழங்கியவர் யார்?
- எனது அறிவு அன்றி அதற்குத் தங்குவதற்கு வேறு இடம் இல்லையோ?
- ஆகாயப் பூவும் கானல் நீரும் எப்போதேனும் பயன்பாட்டுக்கு வருமோ?

நான் சரண் அடையலாம் என நினைகின், அதற்கான திருவருள் வெளிப்படா வண்ணம், போதனை செய்யப்பட்ட அறிவை மயங்குமாறு செய்கிறதே!

பொய்யான இந்த உலகை மெய் என்பது போலக் காட்டி, என் புந்திக்குள் மயக்க வித்தை செய்து, இல்லாததை இருப்பது போல் நிலை நாட்டுகிறதே!

இதனை வெல்வதற்கு உரிய ஒரு வழி வகையை நீ எப்பொழுது தந்து அருளப் போகிறாய்? கூறுவாயாக!

தாயுமானவரின் இந்த கேள்விக்கு வேதாத்திரியம் "மாயையும் ஞானமும்" என்ற தலைப்பிலே ஒரு விடையைத் தருகிறது.

"உருவத்தின் முன்தொடர்போ வித்தின் மூலம்,

உயர் அறிவிற்கோ மூலம் உருவமாகும்.

பருவத்திற் கேற்றபடி உணர்ச்சியூடே,

பல தொழில்கள் ஆற்றும்மதி வேகம்கூட,

அருவத்தில் வியாபித்தாம் அகண்டாகாரம்

அந்நிலையில் அனுபவமாம். இவ்விரண்டில்

மருவித் தான்பெற்ற பலத்துக் கேற்ப,

மறப்பதும் பின் நினைப்பதுமே மாயை-ஞானம்" (ஞாக.பா.1362)

மனிதன் தற்போதை உருவம் உடலாக வந்து வாழ்ந்து கொண்டிருக்கிறது. முன் தொடரான பெற்றோர்களின் வித்தின் மூலம் உடல் கட்டப்பட்டுள்ளது.

ஆனால் மனித அறிவோ பெற்றோர்களின் உருவம் தான் மூலம் எனக் கருதுகிறது. இந்நிலை உண்மைக்கு மாறானது ஆகும்.

இறைநிலையின் தன்மாற்ற சரித்திரம் தான் மனிதனின் கதையும் கூட, இதுவே மாயை அல்லது அறிவின் மயக்க நிலை எனப்படும்.

உடலும் அறிவும் வளர்ச்சியடைகிறது. குழந்தைப்பருவம், இளமைப் பருவம், முதுமைப்பருவம் என்ற பருவ மாற்றங்கள் ஏற்பட்டுக் கொண்டேயுள்ளது.

பருவ நிலைகளுக்கேற்ப பல செயல்கள் உணர்ச்சி என்ற வகையில் அறிவு செயல்படுத்தும் அறிவின் வேகமானது கூடி விரிவடைகிற போது, தனது மூலமாகிய அரூபத்தில் விரிந்து அகண்டாகார அனுபவம் கிட்டும்.

உணர்ச்சி நிலையில் உடல் அளவில் அறிவு இயங்குவதும், உணர்வு நிலையில் அகண்டாகாரமாக விரிவடைவதுமான இரண்டு நிலைகளில் பெறும் பலத்திற்கு ஏற்ப உண்மை உணர்வை மறப்பதும் பின்னர் நினைப்பதுமே ஞானமுமாகும்.

உண்மையை நினைப்பது ஞானம், மறப்பது மாயை ஆகும்....என்பது வேதாத்திரியம்.

உயிர்களின் தோற்றமே மாயை எனும், பிம்பங்களால் ஆனது; இதில், அனைத்தையும் அறிந்து விட்டோம் என்று நமக்குள் எழும் ஆணவம் கூட, மாயை தான் என்பதை, அறிந்து தெளிய வேண்டும்.

அனைத்தும் மாயையின் சொரூபம் என்பது தெரிந்து விட்டால், நம்மிடம் இருக்கும், ஆணவம், கோபம், வெறுப்பு, விரோதம், கயமை அத்தனையும் மறைந்து, சக மனிதரை நேசிக்கும் பண்பு நமக்குள் ஏற்படும். மாயை வென்று நாமும் ஆனந்தமாக வாழ்வோமாக!

# வாழ்வித்த ஞானகுருவே

ஒவ்வொரு மனிதனுக்கும் இருக்க வேண்டிய மிக முக்கியமான ஞானம் நிலையாமை ஞானம்,

மனிதனின் மன நிம்மதிக்கு உதவக்கூடிய ஞானங்களில் இது மிகவும் முக்கியமானது ஆகும்.

உயிர் நிலையாமை, உடல் நிலையாமை, பொருள் நிலையாமை, புகழ் நிலையாமை, பதவி நிலையாமை என்று இந்த நிலையாமை பற்றி சொல்லிக்கொண்டே போகலாம்.

இது சாக்குருவி வேதாந்தம் அல்ல. வாழ்வின் சாசுவதமான வேதாந்தம். ஏனெனில் இந்த பிரபஞ்சத்தில் நிலையானதும் நிலையாமை தான்.

தாயுமானவர், இந்தப்பாடலில் நிலையாமைகளைப் பற்றி நினைவு கூறுகிறார். கடைசியாக "சும்மா இரு" என்று உபதேசம் செய்த தன் மௌனகுருவை போற்றி வணங்குகிறார்.

மின் அனைய பொய் உடலை நிலை என்றும் மைஇலகு
விழிகொண்டு மையல்பூட்டும்
மின்னார்கள் இன்பமே மெய் என்றும். வளர்மாட
மேல்வீடு சொர்க்கம் என்றும்.

பொன்னைஅழி யாதுவளர் பொருள் என்று போற்றிஇப்
பொய்வேடம் மிகுதிகாட்டிப்.
பொறை, அறிவு. துறவுஈதல், ஆதிநல் குணம் எலாம்
போக்கிலே போகவிட்டுத்.

தன் நிகரில் லோபாதி பாழ்ம்பேய் பிடித்திடத்,
 தரணிமிசை லோகாயதன்
சமயநடை சாராமல் வேதாந்த சித்தாந்த
 சமரச சிவாநுபூதி

மன்ன.ஒரு சொல் கொண்டு எனைத்தடுத்து ஆண்டு, அன்பின்
 வாழ்வித்த ஞானகுருவே!
மந்த்ரகுருவே யோக தந்த்ரகுருவே மூலன்
 மரபில்வரும் மௌன குருவே.” (தா.பா.40)

- மின்னல் போலத் தோன்றி, விரைந்து மறையும் நிலை இல்லாத உடம்பை நிலையானது என்றும்,
- மைபூசிய கண் கொண்டு காமத்தை வளர்க்கும் மகளிர் தரும் இன்பத்தை நிலையானது என்றும்.
- உயரமான மாடி வீடே இன்ப உலகம் என்றும்.
- பொன்தான் அழியாததும் வளர்கின்றதுமான பொருள் என்றும்.
- பலபடப் புகழ்ந்து,
- பொய்யான வாழ்வை மிகவும் உயர்த்திப் பிடித்து.
- பொறுமை, அறிவுடைமை, துறவு, ஈதல் முதலிய நல்ல குணங்களைக் கடைபிடியாது,
- அதனைத் தன் போக்கிலே போகவிட்டு,
- தனக்கு ஒப்புமை கூற முடியாத உலோபம் முதலிய தீயகுணங்களாகிய பேயானது பிடித்து ஆட்டிப் படைக்க,
- உலகின்மீது உலகாயதன் மதத்தைச் சார்ந்து வாழாதபடி,
- வேதாந்த சித்தாந்தப் பொதுமையால் சிவனது திருவடி நிழலில் துய்க்கும் பேரின்ப அனுபவத்தைத் தந்து,
- அதனில் பொருந்தி நிற்குமாறு,

“சும்மா இரு” என்னும் ஒரு சொல் கொண்டு என்னைத் தடுத்து அடிமை கொண்டு வாழச்செய்த ஞான குருவே! மந்திர குருவே! திருமூலர் மரபில் வரும் மௌன குருவே.

தாயுமானவர், அரசரிடம் அமைச்சராக இருந்தார். இளமையிலேயே வடமொழி . தமிழ்மொழி, உட்பட வேதங்களையும் இலக்கியங்களையும் கசடறக் கற்று புலமைப் பெற்றிருந்தார்.

தாயுமானவர் ஆலயத்தில், அவர் ஒரு குருவை சந்திக்கிறார். அவர் இவரை "சும்மா இரு" என்று உபதேசித்துச் செல்கிறார். அதனால் தாயுமானவர் குருவுக்கு, மௌனகுரு என்று பெயர்.

## 'சும்மா இரு சொல் அற'

'சும்மா இருத்தல் என்பது நடைமுறை வாழ்வில் சாதாரணமாக பல்வேறு பொருள் கொண்ட சொல்லாக பயன்படுத்தப்பட்டு வருவதை அவதானிக்கலாம்.

*'சும்மா வந்தேன்!*
*சும்மா இரு!*
*சும்மா இருக்கிறன்*
*சும்மா சொன்னனான்!*
*சும்மா கொடுத்தவனோ?*
*சும்மா கொடுப்பனோ?*
*சும்மா செய்வனோ?*
*சும்மா போகலாம்*
*சும்மா இருப்பான்*
*சும்மா வருவான்'*

இப்படி, கற்றோரும் கல்லாதோரும் எதற்கெடுத்தாலும் எதைச்சொல்லவிரும்பினாலும் 'சும்மாவை மட்டும் மறக்காமல் சொல்லி விடுகிறார்கள்.

தமிழ் மொழிக்களஞ்சியத்தில் நிறைந்திருக்கிற ஆயிரக்கணக்கான சொற்களுள் அடிக்கடி பயன்படும் ஒரு சொல்லாக 'சும்மா என்பது விளங்குகிறது.

இச்சொல்லின் பொருளினை தெரிந்தோ, தெரியாமலோ எல்லோரும் பயன்படுத்தி வருகின்றனர்.

இச்சொல்லின் அதிசயம் என்ன எனில், இச்சொல் தமிழில் மட்டுமன்றி மலையாளம் முதலிய மொழிகளிலும் பெரிய வேறுபாடின்றி பயன்படுத்தப்பட்டு வருகிறது.

சேரநாட்டு மொழியான மலையாளத்தில் ‘சும்மா’, ‘சும்மக’ என்றும் கன்னடத்தில் ‘சும்மென’ என்றும் கோலாமி என்ற மொழியில் ‘சுர்மி’ என்றும் நாய்க்கி என்ற இந்திய மொழியில் ‘சுரும், சுருமக’ என்றும் பயின்று வருதல் ஆய்வாளர்களால் அடையாளப்படுத்தப்பட்டுள்ளது.

ஆகவே சும் என்ற ஒலிக் குறிப்புச் சொற் பகுதியோடு “ஆ” என்ற எதிர்மறை விகுதி சேர்ந்து மகரம் இரட்டித்து சும்மா என்ற சொல் வடிவம் பெற்றிருக்கலாம்.

ஆரவாரமற்று ஒலியற்று பேச்சற்று அமைதியாய் சுகமாக ஆனந்தமாக இருத்தல் என்ற பொருளை இது கருதக்கூடும். ஆயினும் இச்சொல்லுக்கு வழக்கில் பல பொருள்கள் உண்டு.

வேலை வெட்டி இல்லாமல் இருத்தல், அமைதியாய் இருத்தல், பயனில்லாமல் இருத்தல், அக்கறையில்லாமல் இருத்தல், அடிக்கடி என்று பல பொருள்களில் இது வழங்கிவருகிறது.

காளமேகப்புலவரின் பாடல்கள் பலவற்றிலும் ‘சும்மா’ என்பதும் ‘ஒன்றும் செய்யாமல் இருத்தல்’ என்ற பொருளில் காட்டப்பட்டுள்ளது. இவரது காலம் 15ஆம் நூற்றாண்டு என்பது அறிஞர் கொள்கை.

*‘இம் என்னு முன்னே எழுநூறும் எண்ணூறும்*
*அம் என்றால் ஆயிரம் பாட்டு ஆகாதோ? – சும்மா*
*இருந்தால் இருந்தேன்: எழுந்தேனே ஆயின்*
*பெருங்காள மேகம் பி(ள்)ளாய்* ” (தனிப்பாடல்– 124)

என்ற பாடல் இவற்றுக்கு உதாரணமாகும்.

ஆக, இவ்வாறு இலக்கியங்களிலும் மொழி வழக்காறுகளிலும் பல்வேறு பொருள் கொண்டு பேசப்படும் ‘சும்மா’ என்ற சொல்

அருணகிரிநாதரின் திருவாக்குகளில் பல பொருள் கொண்டு அணுகப்படுகிறது.

தத்துவ நிலைகளின் உச்சமாக யோகநெறியின் வெளிப்பாடாக அருணகிரியார் பேசும் ‘சும்மா இருத்தல்’ பொருள் கொள்ளப்படும்.

முப்பத்தாறு தத்துவங்களும் ‘தற்போதமும்’ நீங்கி தனக்கெனச் செயலின்றி அருளே தாரகமாய் அவ்வருளேயாய் நிற்கும் துரிதநிலையே அருணகிரிநாதர் பேசும் ‘சும்மா இருக்கும்’ உயர்நிலை ஆகும்.

*‘சொல்லுகைக்கில்லை என்று எல்லாம் இழந்து*
*சும்மாவிருக்கும் எல்லையுள் செல்ல என்னை விட்டவா’* (கந்தரனுபூதி – 10)

*‘சும்மா இரு சொல்லற என்றலுமே*
*அம்மா பொருள் ஒன்றுமறிந்திலனே.’* (கந்தரனுபூதி – 12)

என்று கந்தரனுபூதிப் பாடல்களில் அருணகிரிநாதர் சும்மா இருக்கும் திறம்பற்றிப் பேசுவதை அவதானிக்கலாம்.

ஆக, சும்மா இருத்தல் என்பது மஹாவாக்கியமாக அருளாளர்களால் உபதேசிக்கப்பட்டு வருவதையும் கடைப்பிடிப்பதற்கு கடினத்தன்மை உடையதாயினும் மிகப்பெரும் சீர்மையை தரவல்ல ஒன்று என்பதும் சிந்திக்கத்தக்கதாகும்.

*“சும்மா இருக்க வைத்தான் சூத்திரத்தை நானறியேன்;*
*அம்மா பொருளிதென அடைய விழுங்கினனடி”*

என்பது அருணகிரியாரின் பின் தொடரும் பட்டினத்தாரின் கூற்று.

தாயுமான சுவாமிகளும் ***“சும்மா இருக்கும் சுகம் ஒன்றறியேன் பராபரமே”*** என்று குறிப்பிடுகிறார். சும்மா இருந்தால் என்னவெல்லாம் கிடைக்கும் என்ற கேள்விக்கு ஒரு பாடலில் மிக நீண்ட பதிலை அவர் அளிக்கிறார்.

மௌனகுரு என்றால் பேசமாட்டார் என்று பொருள் அல்ல. அதிகம் பேசமாட்டார். அளவாகப் பேசுவார். மிதமான சொற்களைத் தான் பேசுவார்.

தாயுமானவர் குருவிடம் இறைவனைக் காண்கிறார். குரு மௌனமாக இருந்து, சொல்லாத வார்த்தையைச் சொன்னார் என்று கூறுகிறார்.

மோனத்தின் பெருமையை வேதாத்திரியம் பேசுகிறது.....

"மோனநிலையின் பெருமை யார் எவர்க்கு
 முன்படர்ந்து வாயாலோ சொல்லக்கூடும்?
மோனமே அறிவினது அடித்தளம்ஆம்.
 மிகவிரிவு! எல்லையில்லை! காலம் இல்லை!
மோனத்தில் அறிவு தோய்ந்து பிறந்தால்,
 முன்வினையும் பின்விளைவும் நீக்கக் கற்கும்,
மோனநிலை மறவாது கடமை ஆற்ற,
 மேன்மை,இன்பம், நிறைவு, வெற்றி அமைதியுண்டாம்."
(ஞாக.பா.1640)

அறிந்து கொள்வதனால் அறிவு என்கிறோம். அறிவு வேறு உணர்வு வேறு. ஆத்மானுபவமே உணர்வு ஆகும். ஆன்மா உணர்ந்து கொள்வதனால் உணர்வு என்கிறோம்.

மோன நிலையில் இருப்பு இயக்கம் என்ற இரண்டு அற்ற நிலை உணரப்படும். அதன் பெருமையை சிறப்பை, உயர்வை யாரும், யாருக்கும் வாய் வார்த்தைகளால் சொல்லமுடியாது. அவரவர்கள் முயன்று உணரத்தான் முடியும்.

அறிவின் அடித்தளம் மோனநிலையாகும். எல்லை, காலம் என்பதை எல்லாம் கடந்து எல்லையற்றதும், மிக விரிவுடையதும் ஆகும்.

மோனத்தில் அறிவானது மூழ்கித்தோய்ந்து வெளிப்பட்டுப் பிறக்குமேயானால், பழைய பழக்கப் பதிவுகளான பாவ பதிவுகளை

நீக்கக் கற்றுக் கொள்ளும். பதிவின் விளைவுகளை அனுபவித்து நீக்கி கொள்ளும்.

மோன நிலையில்; பழகிப் பழக, அந்நிலையினை மறவாமல் கடமைகளை கடமைக்காவே இயற்றுகிறபோது இரக்கம், துன்பம், நிறைவு, வெற்றி, அமைதி ஆகியவை மலர்ச்சி பெறும். இவையே மௌனநிலையின் சிறப்பும் பெருமையும் ஆகும்.

நாமும், நாள்துாறும் சில மணித்துளிகளாவது மாதந்தோறும் சில நாட்களாவது மௌனம் இருந்து ஆனந்தமாக வாழ்வோமாக.

# தூய்மையை நாடிச் செல்லும் பயணம்

அகத்தாய்வு என்பது தூய்மையை நாடிச் செல்லும் பயணம்.

தன்னையே உள்நோக்க அறிவால் ஆராய்ந்து. தன்னிடம் அமைந்துள்ள உணர்ச்சி வயப்பட்ட குணங்களையெல்லாம் அறிந்து, அவற்றையெல்லாம் மாற்றி அமைத்துக் கொள்ளத் தகுத்த போதனை, சாதனை முறைகள் தான் “அகத்தாய்வு” என்பதாகும்.

இததகைய வாழ்க்கையே, முன்னோர்கள் கண்ட நெறி என்று தாயுமானவர் சொல்கிறார்.

போனகம் இருக்கின்ற சாலையிடை வேண்டுவ
புசித்தற்கு இருக்கும் அதுபோல்
புருடர்பெறு தர்மாதி, வேதமுடன் ஆகமம்,
புகலும் அதி னால் ஆம்பயன்,

ஞானநெறி முக்யநெறி காட்சிஅனு மானம் முதல்
நானாவி தங்கள் தேர்ந்து
நான்நான் எனக்குழறு படைபுடை பெயர்ந்திடவும்
நான்குசா தனமும்ஓர்ந்திட்டு.

“ஆனநெறி யாம்சரியை ஆதிசோ பானம் உற்று
அணுபஷம் சம்புபஷம்
ஆம் இரு விகற்பமும் மாயாதி சேவையும்
அறிந்து இரண்டு ஒன்று என்னும் ஓர்

மானத விகற்பம் அற வென்றுநிர் பதுநமது
மரபென்ற பரமகு ருவே

மந்த்ரகுருவே யோக தந்த்ரகுருவே மூலன்
மரபில்வரும் மௌன குருவே." (தா.பா.41)

- உணவுச்சாலையின் இருக்கும் ஒருவன், தனக்கு வேண்டும் உணவை, வேண்டும் அளவு உண்பதுபோல வேதம் ஆகமங்களில் உறுதிப்பொருள்கள் எனச் சொல்லப்பட்ட அறம்,பொருள், இன்பம், வீடு என்னும் நான்கை யும் ஒரு புருடன் நன்கு ஆராய்ந்து,
- அதனால் வரும் முதன்மைப் பயன், ஞானநெறியை மேற்கொண்டு ஒழுகுவது என்பதை காட்சி, அனுமானம் என்னும் இரண்டு அளவைகளால் கண்டு தெளிந்து, "நான்நான்" என்னும் அகங்காரத்தால் பிதற்றுவதை அறிவே விட்டொழித்து,
- நால்வகைப் பயிற்சித் துணைகளையும் ஆராய்ந்து தெளிந்து, சரியை முதலிய நெறியில் பத்து படி முறையில் முன்னேறி,
- சீவன் தானே பக்குப்படுதலும், திருவருளால் பக்குபவப்படுதலும், ஆக இருவகையாலும் பக்குவப்பட்டு,
- மாயை முதலியவற்றால் வரும் உலகப் பற்றுக்களை விட்டெரித்து, இரண்டு என்றும் ஒன்று என்றும் சொல்லும் வேறுபாடு இல்லாது,
- வெற்றியுடன் நிற்பதே நமது முன்னோர்கள் கண்ட நெறி என்று மேலான குருவே! நீவிர் கூறி அருளினீர்!

நமது முன்னோர்கள் கண்ட நெறி தன்னை அறிதலாகும். "அவனில் அணு – அணுவில் அவன் உன்னில் எல்லாம் உன்னை நீ அறி" என்பது வேதாத்திரியம்.

"தனது குறை ஆழ்ந்துணர்ந்து திருத்தம்பெற்றால்,

தருக்கொழியும். பிறரிடமும் நட்பு ஓங்கும்.

மனது ஒருதூய நிலையை நாடிச் செல்லும்.

மற்றவரும் இதன் விளைவாய் நலம் காண்பார்கள்.

“எனது நான்” எனும்இரண்டு சொற்களுக்கும்,

ஏற்புடைய கருத்துணரும் தகைமை கிட்டும்.

உனது சொல், செயல் எண்ணக் குறைகள் போக்க

உயர்ந்த தற்சோதனையைப் பழகிக் கொள்க” (ஞாக.பா.1613)

மனித மனமானது எப்போதும் மற்றவர்களின் குற்றங்களையும், குறைகளையுமே பார்த்துக் கொண்டு இருப்பதால், தனது குற்றம் குறைகளைத் தெரிந்து கொள்ள முடிவதில்லை.

தற்சோதனை செய்து தனது குறைகளைத் தெரிந்தும் உணர்ந்தும் திருத்தம் மேற்கொண்டால் அகங்காரம் என்ற கர்வம் ஒழியும். மற்றவர்களிடம் நட்புணர்வு உயர்வடையும்.

மனமனாது மாசுகள் நீங்கப் பெற்றதால் ஒரு தூய்மையான நிலையை நாடிச் செல்வது இயல்பாகும். அதன் விளைவாக மற்றவர்களும் நன்மை அடைவார்கள்.

“எனது” என்பது பொருள் பற்றும், மக்கள் பாசமும்தான் என்பதையும், “தான்” என்பது அதிகாரப் பற்றுதான் என்பதையும், இரு சொற்களுக்கான அறிவிற்குப் பொருத்தமான கருத்தை உணர்கின்ற தகைமை கிட்டும்.

எண்ணம்தான் சொல்லாக, செயல்களாக, விளைவாக வருகிறது. அவற்றின் குறைகளைப் போக்கிக் கொள்வதற்காக தன்னையே சோதிக்கும் மேலான தற்சோதனையைப் பழகிக் கொள்வீர்களாக.

தான் என்ற அதிகாரப்பற்றும், தனது என்ற பொருள் பற்றும் மக்கள் பாசமும் தன்முனைப்பு எனப்படும்.

தன்முனைப்பு நீங்கப் பெற்றால் இறைமுனைப்பு இயல்பாகிவிடும். இதைத் தான் நம் முன்னோர்கள் வகுத்த நெறி என்கிறார் தாயுமானவர். நாமும் நாள்தோறும் தற்சோதனை செய்வோம்.

நமக்கு பக்கத்திலேயே இருக்கும் மனவளக்கலை மன்றங்களுக்குச் சென்று, எண்ணம் ஆராய்தல், ஆசை சீரமைத்தல், சினம் தவிர்த்தல், கவலை ஒழித்தல், நான் யார்? என்ற அகத்தாய்வு பயிற்சிகள் மூலம் அகத்தை செய்து கொள்வோம்.

ஆக்கினை, துரியம், துரியாதீதம் முதலிய அகத்தவப் பயிற்சிகளைப் பயின்று மன வலிமையைப் பெருக்கிக் கொள்வோம்.

அகத்தாய்வு பயிற்சி ஆறு தீயகுணங்களைப் போக்க உதவுகிறது. பேராசை, சினம், கடும் பற்று, உயர்வு தாழ்வு மனப்பான்மை, முறையற்ற பால் கவர்ச்சி, வஞ்சம் என்ற தீயகுணங்களை முறையே நிறைமனம், பொறுமை, ஈகை, நேர்நிறை உணர்வு, கற்பு, மன்னிப்பு என்ற நற்குணங்களாக மாற்றுகின்றது.

அகத்தவம் செய்து, இறைவனே நானாக இருக்கிறான் என உணர்ந்து ஆனந்தமாக வாழ்வோமாக.

# உய்யும் வகை தேடி உள்ளம் உருகி நின்றேன்

தாயுமானவரது ஒவ்வொரு பாடலும், ஒவ்வொரு சொல்லும் நம்மை உற்சாகப்படுத்தும்.

தாயுமானவர் அதிகமான பாடல்களில் ஏன் தன்னை நிந்தித்தார்?

ஒரு சாதகன் ஆரம்ப நிலையிலிருந்து படிப்படியாக எவ்வாறு முன்னேற வேண்டும் என்பதற்காக தன்னை நிந்தித்தார்.

ஒரு சாதகனின் ஆன்மீகப் பயணம் எவ்வாறு அமைய வேண்டும் என்பதற்காகவே பாடப்பெற்றது தாயுமானவரது பாடல்கள்.

சாதகன் முதலில் போகியாகி, விவேகியாகி, வைராக்கியாகி ஞானம் அடைகிறான்.

தாயுமானவர் ஞானம் அடைந்த பின்னர் பரப்பிரம்ம ஞானத்தை உணருகிறார். ஆசையே அவருக்கு இல்லை. மனநிறைவு கிடைக்கிறது. பின்பு ஞானநிஷ்டை அடைகிறார்.

“கல்லாத அறிவும், மேல் கேளாத கேள்வியும்
    கருணைசிறிதும் ஏதும் இல்லாக்
  காட்சியும், கொலைகளவு கள்காமம் மாட்சியாக்
    காதலித் திடுநெஞ்சமும்,

பொல்லாத பொய்ம்மொழியும் அல்லாது நன்மைகள்
    பொருந்துகுணம் ஏதும்அறியேன்.
  புருஷர்வடிவு ஆனதே அல்லாது கனவிலும்
    புருஷார்த்தம் ஏதுமில்லேன்.

எல்லாம் அறிந்தநீ அறியாதது அன்று, எனக்கு
எவ்வண்ணம் உய்வண்ணமோ?
இருளைஇருள் என்றவர்க்கு ஒளிதா ரகம், பெறும்
எனக்குநின் அருள்தாரகம்.

வல்லான் எனும்பெயர் உனக்குள் உள்ளதேஇந்த,
வஞ்சகனை ஆளநினையாய்.
மந்த்ரகுருவே யோக தந்த்ர குருவே மூலன்
மரபில்வரும் மௌன குருவே." (தா.பா.42)

- பக்திநூல்களைக் கல்லாது உலக நூல்களைக் கற்றதால் ஏற்பட்ட அறிவும்.
- பதியினது பெருமைகளைப் பேசும் திருமுறை வாசகங்களைக் கேளாது ஏனையவற்றைக் கேட்டதால் பெற்ற அறிவும்.
- இரக்கம் ஒரு சிறிதளவும் இல்லாத பார்வையால் பெற்ற அறிவும்.
- கொலை, களவு, கள், காமம் ஆகிய இவற்றை மேலானவை எனக் கருதி விருப்பம் கொண்ட மனமும்.
- தீமையை விளைவிக்கும் பொய்யான மொழியும்.

ஆகிய இவைகளைத் தவிர, நன்மை பொருந்திய குணம் எதனையும் நான் அறிந்ததில்லை.

ஆன்மா ஓர் ஆளாக (புருடனாக) வந்து பிறந்துள்ளதே தவிர, கனவில்கூட அறம், பொருள், இன்பம், வீடு குறித்து அறியும் அறிவு (புருஷார்த்தம்) என்னிடம் இல்லை.

எல்லாம் அறிந்த உனக்குத் தெரியாதது ஒன்றுமில்லை. எனவே, அடியேன் உய்யும் வகை எந்தவகையோ?

இருளை இருள் என்று அறிந்தவர்க்கு ஒளியைப் பெறுவதே குறிக்கோளாக இருக்கும்.

எனவே அறியாமையில் மூழ்கி இருக்கும் எனக்கு உனது அருளைப் பெறுவதே குறிக்கோளாக இருக்கிறது.

அதற்குரிய வல்லமை உடையவன் என்ற பெயரும் உனக்கு இருக்கிறது. எனவே இந்த வஞ்சக நெஞ்சமுடையவனையும் அடிமை கொள்ள நினைவாயாக!

அடியேன் உய்யும் வகை எந்தவகையோ? என்ற தாயுமானவரின் கேள்விக்கு வேதாத்திரியம் எளிமையாகச் சொல்லி வழி காட்டுகிறது,

“உய்யும் வகை தேடி உள்ளம் உருகி நின்றேன்
உயர் ஞான தீட்சையினால் உள்ளோடுங்கி
மெய்யுணர்வு என்னும் பெரும் பதம் அடைந்தேன்
மேல் நிலையில் மனம் நிலைத்து நிற்க நிற்க
ஐயுணர்வும் ஒன்றாகி அறிவறிந்தேன்
ஆசையென்ற வேகம் ஆராய்ச்சியாச்சு
செய்தொழிகளில் கடமை உணர்வு பெற்றேன்
சிந்தனையில் ஆழ்ந்து பல விளக்கம் கண்டேன்” (ஞாக.9)

வாழ்வின் நோக்கம் தெரியாமல், உணராமல் - பிறிவியின் நோக்கம் புரியாமல் தடுமாறி வாழந்து வந்தேன்.

இரவும் பகலும் விடைகாண சிந்தித்து உருக்கமான மனநிலையில், வாழ்வின் வகை தேடினேன்.

குருவின் மூலம் ஞானதீட்சை பெற்றதன்பின், மனம் ஒடுங்கி அறிவு என்ற நிலைக்குப் போகும் போது, உண்மை உயர்வு கிட்டியது.

மனம் விரிந்த நிலையில் பழகப்பழக ஐம்புலன் உணர்வுகளாகிய அழுத்தம், ஒலி, ஒளி, சுவை, மணம் என்னும் ஐயணர்வும் ஒரே உணர்வாகியதால், மன அலைச்சுழல் வேகம் குறைந்தது.

மனதின் அடித்தளம் அல்லது மனதின் மறுமுனை அறிவு என்ற நிலையை அறிந்தேன்.

நிலையில் அறிவாக இருப்பதே அலையின் மனமுமாக இருக்கிறது. மனம் என்ற வகையில் செயல்படும்போது இன்ப துன்ப விளைவாக வருகிறது.

மீண்டும் மீண்டும் அந்தவகையில் செயல்படுகிறோம். மனம் கடந்தால் இன்ப துன்பம் என்ற இரட்டைகளில்லை. அது அமைதி நிலை.

அந்நிலையில் உலகியல் தேவைகளின்பால் ஏற்பட்ட இச்சகைளை யெல்லாம் ஆராய்ச்சி செய்ய முடிந்தது.

எது தேவை? தேவையில்லை என்ற ஆராய்ச்சியில், விளைவு துன்பம் தருமேயானால் அந்த ஆசை தேவையில்லை என்று முடிவெடுத்தபோது நிறைமனம் கிட்டியது.

அதனால் செய்யக்கூடிய செயல்களையெல்லாம் கடமைக்காக கடமை செய்தல் என்ற வகையில் செய்தபோது, மனநிறைவு, அமைதி, மகிழ்ச்சியினால் சிந்தனை தூண்டப்பெற்று மேலும் மேலும் வாழ்வியல் விளக்கங்கள் கிட்டியது.

இறைநிலையை குரு என்பார்கள். அந்த இணைப்பால்தான் வாழ்வியல் விளக்கங்கள் கிட்டமுடியும். எய்தமுடியும். நாமும் வேதாத்திரியம் தரும் “உய்யும் வழியில் பயணித்து ஆனந்தமாக வாழ்வோமாக.

# உன்மகிமையது சொல்ல எளிதோ?

மனம் வாக்குக்கு எட்டாதவர் இறைவன். மனதுக்கும் இந்திரியங்களுக்கும் விளங்குகின்ற நிலையில் இருப்பது இப்பிரபஞ்சம்.

இப்பிரபஞ்சம் இறைவன் இல்லாவிட்டால் இருக்க முடியாது.

கயிற்றைப் பாம்பாகக் காண்பது ஒரு மயக்க நிலை. அவ்வாறு இறைவனை இப்பிரபஞ்சமாகக் காண்பது ஒரு மயக்க நிலை.

கயிற்றைப் பாம்பாகக் காண்கின்ற பொழுதும் கயிறுதான் இருக்கிறது. பாம்பு இல்லை.

இல்லாததை இருப்பதாக எண்ணி இருப்பதை அறிந்து கொள்ளாமல் இருப்பதுதான் மயக்கநிலை.

இல்லாத இப் பிரபஞ்சத்தை இருப்பதாக நினைத்து இருக்கின்ற இறைவனை மறந்திருப்பது நம்முடைய மயக்க நிலையாகும்.

இதனைத்தான் தாயுமானவர் "உள்ளதும் இல்லது மாய்" என்கிறார்.

பஞ்சேந்திரியங்களுக்குப் புலப்படும் பொருள்களை உள்ளம் பற்றிப் பிடிக்கின்ற பொழுது அவை நம்முடையவை என்று உணர்வு உண்டாகிறது.

அப்படி மனத்தில் உணர்ந்து பற்றிய பொருள்களை நாம் விட்டு விலக முடிவதில்லை.

மனம் தான் பற்றிய பொருள்களில் அழுந்திப்போய் மெய்ப்பொருள் நாட்டம் கொள்ளாதிருக்கிறது.

இதனைத்தான் தாயுமானவர் "முன்-உற்ற உணர்வது வாய் உன் உளம்கண்டது எல்லாம்" என்று சொல்கிறார்.

“கானகம் இலங்குபுலி பசுவொடு குலாவும்நின்
கண்காண மத யானை நீ
கைகாட்டவும் கையால் நெகிடிக்கு எனப்பெரிய
கட்டைமிக ஏந்திவருமே.

போனகம் அமைந்தது என அக்காம தேனுநின்
பொன்அடியில் நின்றுசொலுமே.
புவிராசர் கவிராசர் தவராசர் என்று எனைப்
போற்றிஜய போற்றி என்பார்.

ஞானகரு ணாகர முகம் கண்ட போதிலே
நவநாத சித்தர்களும் உன்
நட்பினை விரும்புவார் சுகர், வாமதேவர் முதல்
ஞானிகளும் உனை மெச்சுவார்.

வானகமும் மண்ணகமும் வந்து எதிர் வணங்கிடும் உன்
மகிமையது சொல்ல எளிதோ?
மந்த்ரகுருவே யோக தந்த்ர குருவே மூலன்
மரபில்வரும் மௌன குருவே.” (தா.பா.43)

நினது கண் காணுமாறு, காட்டில் வாழும் புலி பசுவோடு சேர்ந்து திரியும்.

நீ உன் கையினால் குறிப்புக் காட்டினால், மத யானை தீ மூட்டுவதற்கு உதவும் பெரிய மரக்கட்டைகளை ஏந்தி வரும்.

உயர்வான உணவு வகைகளைக் கொண்டு வந்திருக்கிறேன்!” என்று காமதேனு. நினது பொன் போன்ற திருவடியின் நின்று சொல்லும்.

பூமியை ஆளும் அரசர் என்றும், கவிதைக்கு அரசர் என்றும், தவத்துக்கு அரசர் என்றும். வெற்றி உண்டாகுமாறு உன்னை போற்றிப் புகழ்வர்.

உமது ஞானமயமான அருள் திருமுகம் கண்ட அளவில் நவநாத சித்தர்கள் எனப்படுவோர், உன்னிடம் விரும்பி நட்பு கொள்வர்.

தேவர் உலகில் உள்ளவர்களும், நிலவுலகில் உள்ளவர்களும் உம் எதிரில் வந்து நின்று வணங்குவர்.

எனவே உன்னுடைய பெருமை சொல்லுதற்கு எளிமை உடையதோ?

பிரம்மமாகிய சுத்தவெளி ஒவ்வொரு ஜீவராசியிலும் இருக்கிறது என்று சொல்வதை விட சுத்தவெளியே ஒவ்வொரு ஜீவராசியாகத் தன்மாற்றம் அடைந்து உள்ளது என்பதே உண்மை.

ஒன்றே பலவானது என்று வேத காலத்திலிருந்து சொல்லப்பட்டு வந்தாலும், அந்த ஒன்று பெருவெளியே சுத்தவெளியே என்று தொட்டுக் காட்டியது வேதாத்திரியம்.

சுத்தவெளியின் பெருமையை பேசிக்கொண்டே இருக்கலாம். சுத்தவெளியே எல்லாமும் ஆகவும் இருக்கின்றது என்ற பேருண்மையை உலகிற்கு எடுத்த உணர்த்தியது வேதாத்திரியம்.

ஒன்றாக இருந்த பிரம்மம் ஏன், எப்படி பலவாகி பரிணாமம் ஆகி நிற்கிறது என்பது தொன்று தொட்டு இருந்து வரும் கேள்வி. மூலம் ஏன், எப்படி இந்த ஞாலமாக மாறுகிறது என்ற கேள்வி வள்ளலாரிடம் எழுகிறது.

"ஆதி அந்தம் என்றுரைத்தால் வெண்ணிலாவே – அந்த

ஆதி அந்தம் ஆவதென் வெண்ணிலாவே

வித்தில்லாமலே விளைந்த வெண்ணிலாவே – நீ

விளைந்த எண்ணம் ஏது சொல்லாய் வெண்ணிலாவே." (திருஅருட்பா)

இந்த வினாவுக்கு வேதாத்திரியத்தில் மலர்ந்தது பதில். எப்படி?

"ஒவ்வொரு பொருளும் பரம்முதலாய்,

அவ்வுருவரையில் வந்தகதை

செவ்விய சிறு சொல்பரிணாமம்

சிறப்பை உணர்வாய்! நீயும்அதே.”  (ஞாக.பா.1649)

இந்த சுத்தவெளி ஆதி அதுவே மூலம். அறிவும், ஆற்றலுமான மெய்பொருளாகிய வெளி அநாதி, ஆனால் அதற்கு நாம் வைத்த பெயர்கள் அநாதியல்ல. பெயர்கள் அனைத்தும் மனிதன் தோன்றிய பிறகு மனிதனால் தோற்றுவிக்கபட்டவைகள் தான்.

## சுத்தவெளி என்ற தெய்வம்

தாயுமானவர் சுத்தவெளியின் ஆற்றலை குறிக்கும் சொற்களை ஆங்காங்கே தமது பாடல்களில் குறிப்பிட்டிருக்கிறார்.

- “தன்னருள்வெளிக்குளே யகிலாண்டகோடியெல்லாந் தங்கும்படிக்கிச்சை வைத்துயிர்க்குயிராய்த் தழைத்ததெது”
- இங்குக் கடுவெளியாகக் காட்டப்பட்ட (எந்.பொரு.14)
- இறைவனை, சுகாரம்பப் பெருவெளி (பொருள்வகை.1)
- தூவெளி பரப்பு (ஆரணம்.4)
- அகண்டப் பரப்பான ஈசா (சொலற்கரிய.3)
- பெரு வானமே (சிறசுகோ.3)
- துரியங் கடந்த வொன்று தூவெளியாய் நின்ற பெரிய நிறைவே (காண்.3)
- சோதியே நந்தாச் சுகவடிவே தூவெளியே (ஆகாதோ.8)

இதோ பாரதியாரின் வெட்டவெளியின் இரு பரிமான gravity /ஈர்ப்பு ஆற்றல் மற்றும் தள்ளல் ஆற்றலின் கவி

“வெட்டவெளி யாயறிவாய் வேறுபல சக்திகளைக்
கொட்டுமுகி லாயணுக்கள் கூட்டிப் பிரிப்பதுவாய்”

## சுத்தவெளி ஒரு பேராற்றல்

நாம் எங்கே வாழ்கிறோம்? பூமி, உருண்டை என்ற உலகின் மீது. இந்த பூவுலகின் எடை என்ன இருக்கும்? பல கோடி டன்கள் இருக்கலாம் அல்லவா?

இதே உலகம் ஆண்டுக்கு ஒரு முறை சூரியனை வலம் வந்து கொண்டிருக்கிறது. இந்த சூரியனின் எடை எவ்வளவு இருக்கும்? பூமியைவிட சூரியன் 3.33 லட்சம் தடவை எடை அதிகமாக உள்ளது. இப்பொழுது யூகிப்போம். சூரியனும், பூமியும் சேர்ந்தால் மொத்த எடை எவ்வளவு இருக்கும்? நம்மால் சாதாரணமாக கணக்கிடவே முடியாது. எனினும், நமது யூகத்தால் ஓரளவு அனுமானம் கொள்ளலாம். சூரியனும், பூமியும் சேர்ந்து கணக்கிலடங்காத கோடி கோடி டன்கள் எடை இருக்கும் என்று நம்பலாம்.

அடுத்தபடியாக, சூரியனும், பூமியும் எங்கே இருக்கின்றன? இரண்டு கோள்களுமே சுத்தவெளியில்தான் லேசாக மிதந்து, உருண்டு ஓடிக் கொண்டிருக்கின்றன. இது மறுக்க முடியாத உண்மை.

இப்பொழுது சிந்திப்போம். ஒரு பொருள் மீது இன்னொரு பொருள் மிதக்கிறது என்று சொன்னால் எந்தப் பொருள் வலிதாக இருக்கும்? மிதக்கும் பொருளைவிட தாங்கும் பொருள்தான் வல்லமை உடையாதாக இருக்க வேண்டும்.

இந்த கருத்தை மனதால் கணித்துப் பார்த்தோமானால் சூரியன், பூமி இரண்டைவிட சுத்தவெளி அதிக வல்லமை உடையதுதான் என்று ஐயமின்றி விளங்கிக் கொள்வோம்.

இதனால், சுத்தவெளி எந்த ஆற்றலும் இல்லாத ஒரு வெற்றிடம். அல்லது சூன்யம் என்ற கருத்து மாறிவிடுகிறது.

நமக்குத் தெரிந்த சூரியக் குடும்பத்தையும் மேலும் ஆகாய வெளியில் உலவும் கோடிக்கணக்கான சூரியக் குடும்பங்களையும் லேசாகத் தாங்கிக் கொண்டிருக்கும் சுத்தவெளியின் பேராற்றலும் அதன் வல்லமையும் இணையற்றது என்று விளங்கிக் கொள்கிறோம்.

இறைவன் என்ற ஆதிபரம்

எடுத்த பலப்பல கோடி உரு,

நிறைந்த பெரிய மண்டலமே

நெடிய விரிந்த பேரண்டம்" (ஞாக.பா.1649)

ஆதியாக இருந்த பரம் என்ற சொல்லுகின்ற இறைநிலையானது, இப்படித்தான் இயங்க வேண்டும் என்ற தனது பேரறிவாலும், அழுத்தம் என்ற பேராற்றலாலும், தன்நிலையில் மாற்றம் பெற்று எடுத்த பலகோடிக்கணக்கான உருவங்கள் நிறைந்தது பேரியக்க மண்டலம் ஆகும்.

எண்ணில் அடங்காத தோற்றங்களாகி தொடர்ந்து விரிவடைந்து கொண்டேயிருப்பது பிரபஞ்சம் ஆகும்.

பெரிய இயக்க மண்டலமே

பிரபஞ்சம் எனும் மேடையிலே

அரிய உரு அழகோடு

ஆடுகின்றேன் நான் அவன்கதையாக" (ஞாக.பா.1649)

தோற்றம் என்பது உருவங்களாக உள்ளன. ஒவ்வொன்றிற்கும் ஒரு வடிவம் இருப்பதை உருவம் என்கிறோம்.

அழகான துண்டபட்ட உருவத்தில், நான் இறை நிலையின் கதையாக பேரியக்க மண்டலம் என்ற மேடையில் ஆடிக் கொண்டு இருக்கிறேன்.

இந்த பேரியக்க மண்டலத்தில் அருட்தந்தையைப் போல நாமும் ஆனந்தமாக வாழ்வோமாக.

# சரணாகதி என்னும் சாந்தநெறி

சரணாகதி என்பது இந்து சமயத்தின் வைணவ அடியார்கள், எவ்வித பலன் கருதாமல், தங்களை உடல் அளவிலும், ஆன்ம அளவிலும் முழுவதுமாக, பரம்பொருளான திருமாலிடத்தில் ஒப்புவிக்கும் ஒரு வகையான பக்தியாகும்.

**சரணாகதி தத்துவம்** இராமானுசர் மற்றும் சைதன்யர் ஆகியவர்களால் வலியுறுத்தப்பட்டதாகும்.

தாயுமானவரும் தன் மௌனகுருவிடம் சரணாகதி அடைகிறார்.

சருகுசல பட்சணிகள் ஒருகோடி அல்லால்
சகோர பட்சிகள் போலவே
தவளநிலவு ஒழுகு அமிர்த தாரை உண்டு அழியாத
தன்மையர் அனந்தகோடி.

இருவினைகள் அற்றிரவு பகலென்பது அறியாத
ஏகாந்த மோன ஞான
இன்ப நிஷ்டையர் கோடி. மணிமந்த்ர சித்திநிலை
எய்தினர்கள் கோடிசூழக்

குருமணி இழைத்திட்ட சிங்கா தனத்தின் மிசை
கொலுவீற் றிருக்கும் நின்னை
கும்பிட்டு அனந்தமுறை தெண்டனிட்டு, என்மனக்
குறையெலாம் தீரும்வண்ணம்

மதுமல ர் எடுத்து, உன்இரு தாளை அர்ச்சிக்க எனை
வாஎன்று அழைப்பது எந்நாள்?
மந்த்ரகுருவே யோக தந்த்ரகுருவே மூலன்
மரபில் வரும் மௌன குருவே.” (தா.பா.44)

காய்ந்த சருகு. நீர் இவற்றை மட்டும் உண்டு வாழும் ஒரு கோடி பேர் அல்லாது, சகோரப் பறவை போல சந்திர மண்டலத்து அமுதத்தை உண்டு. அழியாத தன்மை பெற்றவர் பல கோடி பேர்.

இருவினைகள் அற்ற நிலையில் (இருவினை ஒப்பு நிகழ்த்தி) இரவு பகல் தெரியாது, ஏகாந்த நிலையில் இருந்து, மோன ஞான இன்ப நிட்டை கூடியவர் கோடி பேர்.

உருத்திராட்சம் அணிந்து. திரு வைந்தெழுத்தைச் செபித்து, சித்தி அடைந்தவர்கள் கோடி பேர் - என இவர்கள் புடைசூழ, இரத்தின சிம்மாசனத்தின் மீது, கொலு வீற்றிருக்கும் உம்மைக் கும்பிட்டு, பல முறை விழுந்து வணங்கி, என் மனதில் உள்ள குறைகள் அனைத்தும் தீருமாறு, மணமுள்ள மலர்களைக் கொண்டு, நினது திருவடிகளை அர்ச்சிக்க. என்னை, “வா!” என்று கூறி அழைத்து. ஏற்றுக் கொள்ளும் நாள் எந்த நாளோ?

இறைநிலையிடம் தன்னை முழுமையாகக் கொடுத்து சரணாகதியாகிறார் தாயுமானவர். சரணாகதி என்னும் சாந்தநெறி பற்றி வேதாத்திரியம் பேசுகிறது.

“தனையடக்கித் தலைவனையே
முன்வைத்து, ஒழுகும் நெறி
சரணா கதியெனும்
சாந்தநெறி. இந்நெறியில்
தனைத் தலைவனாய் காணும்
தன்மை இயல்பாய் வளரும்.
தருக்கொழியும். ஆசிரியன்
தவக்காப்பில உயிர் உய்யும்.” (ஞாக.பா.802)

இறைநிலையை அடைக்கலமாக் கொண்டு, தன்னை இறைநிலைக்கு ஒப்புக்கொடுத்துப் பணிதல் சரணாகதி எனப்படும்.

இறைநிலையே தன் நிலையில் மாற்றம் பெற்று அனைத்து பிரபஞ்சத் தோற்றங்களுமாகியுள்ளது.

அதனால் எல்லாவற்றிலும் இருப்பாக இயக்கமாக, விளைவாக செயல்படுகிறது.

மனிதன் ஐந்து புலன் உணர்வுகளையும் அடக்கி அறிவு என்பதை உணர்ந்து, அந்த அறிவே பேரறிவாக எல்லாவற்றிலும் உள்ளது என்பதை உணரவேண்டும். அதுவே பிறவியின் நோக்கமாகும்.

தன் முனைப்பை நீக்கி இறைநிலையாகிய தலைவனையே முன் வைத்து, இறைமுனைப்பில் வாழ்கின்ற வாழ்வியல் நெறி சரணாகதி என்னும் அமைதி நெறியாகும்.

இந்த நெறியில் வாழும் மனிதர்க்குத் தனது உடலுக்குள் உயிர், உயிர்க்குள் அறிவு அந்த அறிவே தெய்வமாகவும் உள்ளது என்ற உண்மைகள் உணரப்படும்.

தன்னிலே எல்லாவற்றையும், எல்லாவற்றிலும் தன்னையும் காணும் தன்மையானது இயல்பாகவே வளரும்.

ஆணவம் என்னும் அகங்காரம் ஒழியும். இக்கலையைக் கற்றுக்கொடுத்த ஆசானின் தவக்காப்பின் மூலம் உயிர் ஈடேறி உய்யும்.

ஆகவே தன்முனைப்பை ஒழித்து இறை முனைப்பில் தன்னையே இறைநிலையாக உணரும் சரணாகதி என்னும் சாத்வீக வாழ்வின் மூலம் அகங்காரம் ஒழித்து ஆசானின் தவ காப்பின் மூலம் உயிர் ஈடேறும்.

நாமும் அந்த இறைநிலையிடம் சரணாகதி அடைந்து ஆனந்தமாக வாழ்வோமாக.

# தான்தனது என்கின்ற தருக்கற்று வாழ

தன்முனைப்புக்கு இடமில்லாத இடம் ஆன்மீகத் துறையும், பொநலத் தொண்டுமே ஆகும். இறைவனே நான் ஆக இருக்கிறான் என்ற உண்மையைத் தெளிவாக உணர்ந்த நிலையிலே தன்முனைப்பு எழுவே எழாது.

இந்தப் பாடலில் – "தான் தனது நான்" என்ற அகங்காரத்தை எப்படி களைவது என்று கலங்குகிறார் தாயுமானவர்.

ஆங்காரம் ஆனகுல வேடவெம் பேய்பாழ்த்த
ஆணவத்தினும் வலிதுகாண்,
அறிவினை மயக்கிடும். நடுவ அறிய ஒட்டாது
யாது ஒன்று தொடினும் அதுவாய்த்

தாங்காது மொழிபேசும் அரிகரப் பிரமாதி
தம்மொடு சமானம் என்னும்
தடைஅற்ற தேரில் அம் சுருவாணி போலவே
தன்னில் அசை யாது நிற்கும்.

ஈங்கு ஆர் எனக்கு நிகர் என்ன ப்ரதாபித்து
இராவணா காரம் ஆகி,
இதயவெளி எங்கணும் தன் அரசு நாடுசெய்து
இருக்கும். இத னொடு எந்நேரமும்

வாங்கா நிலாது அடிமை போராட முடியுமோ?
மௌன உபதேசகு ருவே
மந்த்ரகுருவே யோக தந்த்ரகுருவே மூலன்
மரபில்வரும் மௌன குருவே." (தா.பா.37)

- நான் என்னும் அகங்காரமானது வேட்டைக்காரனை விடவும், கொடிய பேயை விடவும், பாழாய்ப்போன ஆணவ மலத்தை விடவும், வலிமை உடையது.
- இது அறிவை மயங்கச் செய்யும். நடுநிலையை அறியவிடாது.
- எந்த ஒரு செயலைச் செய்தாலும், அதனுள் புகுந்து, பொறுமையைக் காப்பாற்றாது,
- வேண்டாத சொற்கள் பேசும்.
- திருமால், சிவன், பிரம்மன் முதலியோர்க்கு நிகர் என்று தன்னை கூறிக்கொள்ளும்.
- தங்குதடை இன்றி ஓடும் தேரில், அதன் அச்சாணி அசைவற்று இருப்பது போல தான் அசையாது நிற்கும்.
- “இங்கு எனக்கு நிகராக எவர் உளர்?” எனப் பெருமை பேசி, இராவணன் போன்ற தன்மை உடையதாய், இதயமாகிய ஆகாயத்தில் தான் அரசாட்சி செய்து கொண்டிருக்கும். இந்த அகங்காரத்தோடு நீங்கி நில்லாத அடிமைகயாகிய நான், இதனோடு போராட முடியுமா?

நான் என்னும் அகங்காரத்தை எப்படிகளைவது என்ற விளக்கம் மட்டுமல்ல பயிற்சியும் தருகிறது வேதாத்திரியம்.

“நான் யார்?” என்ற கேள்விக்கு உள்

நாடி, உண்மை விடை கண்டோர்,

“நான் நிறைவான பரம்” என்றார்

நாவால் மட்டும்பிறருக்கு

“நான்தெய்வம்” என்றுரைத்து. பதில்

நல்ல உணவைப் பெறுவர் பலர்!

“நான் பிரம்மம்” ஆம் கருத்தறிந்த

நல்லோர் உலகுக்கு ஒளி போல்வர்!” (ஞாக.பா.1132)

நான் யார்? என்ற கேள்வி ஒவ்வொரு மனிதரிலும் ஏதேனும் ஒரு சந்தர்ப்பத்தில் ஏற்படுவது இயல்பு.

அகநோக்கு தவப்பயிற்சியின் மூலம், உடலுக்குள் உயிர், உயிர்க்குள் அறிவு, அந்த அறிவே தெய்வமாகவும் உள்ளது என்பதை உணர்ந்தவர்கள் "நான் எங்குமே நிறைவான பரம்" என்று உணர்ந்ததை உணர்ந்தவாறு கூறினார்கள்.

ஆனால் வாய் வார்த்தையாக நான் கடவுள் என்று பலரும் கூறி அதற்குப் பிரதியாக நல்ல உணவைப் பெற்று உண்பார்கள்.

இறைநிலையாகிய பிரம்மமே எல்லாமாக ஆகி, எல்லாவற்றிலும் இருப்பாக இருந்து இயக்கிக் காத்து முடித்தும் வைக்கிறது.

அதுவே நானாகவும் இருக்கிறது என்ற கருத்தை உணர்ந்த நல்லவர்கள் உலகுக்கு ஒளி காட்டும் உயர்வானவர்கள் ஆவர்.

நான் என்னும் அகங்காரத்தை அறுத்து ஆன்மிக வாழ்வு மலர வழிகாட்டுகிறது வேதாத்திரியம்.

"நான் என்ற ஒரு சக்தி அறிவென் நிலையில்

நலம்தீது சுகதுக்கம் உணர்கின்ற தாக,

ஊன்கொண்ட உருவமும் உள்ளச் சிறப்பும்

உடைத்தாகிப் பலராக வாழ்கின்றோம்" என்ற

ஆன்மிக விளக்கத்தை மக்கள் அறிந்தெங்கும்

அன்போடும் பண்போடும் அறவழியே நின்று,

தான்தனது என்கின்ற தருக்கற்று வாழ

தனியுடைமைச் சமுதாயம் பொதுவாக வேண்டும்." (ஞாக.பா.1432)

நான், நான் என்று ஒவ்வொரு மனிதரும் கூறிக் கொள்கின்ற ஒரு மாபெரும் ஆற்றல், துண்டுபட்டு அறிவு என்ற நிலையில், நல்லது –

கெட்டது, இன்பம் – துன்பம் என்கின்ற இரட்டைகளை மனிதரில் உணர்கின்றது.

தசையால் ஆன உடல் என்ற உருவமும், உடலுக்குள் உயிர். அந்த உயிர்க்குள் அறிவு என்ற சிறப்பையும் கொண்டு, பலராக வாழ்கின்றோம் என்ற ஆன்மீக விளக்கத்தை மக்கள் அறிந்து கொள்ள வேண்டும்.

அப்படி அறிந்து கொள்வார்களேயானால், தான், தனது என்ற தன்முனைப்பு நீக்கிவிடும். அன்போடும் தெய்வீகப் பண்போடும் அறவழியில் மனிதர்கள் வாழ்வதற்கு, கடமைகளும் உரிமைகளும் சமுதாய பொது உடைமை ஆகவேண்டும்.

பொது உடைமையினால், தனிநபர் உரிமை, உடைமை என்பது நீங்குவதால் மனிதநேயம், ஆன்மநேயம் இயல்பாகவிடும்.

அன்பு, இரக்கம், தொண்டு, தவம், ஈகை, இன்சொல் ஆகிய ஆறும் இணைந்தது ஆன்மீக வாழ்க்கையாகும். இத்தகைய ஆன்மீக வாழ்க்கையை வாழ்வோம்.

# வீடுபேறு எனும் உயர்ந்த பதமும் ஈதே

எல்லா உயிர்களும் வாழ நினைக்கின்றன. மனிதனும் துன்பம் இல்லாத, இன்பம் நிறைந்த வாழ்க்கையையே வாழ நினைக்கின்றான்.

வாழ்க்கையையும் வாழ்க்கையின் நோக்கத்தையும் வாழும் முறை என்ன என்பதையும் அறிந்து புரிந்து உணர்ந்து வாழும் போதுதான் இன்பமாக வாழமுடியும்.

இன்பம் இன்பம் இன்பம் இன்பம்

"பிறவியின் நோக்கத்தை அறிந்த போதும்,
பின்அந்த எல்லையினை அடைவதற்கு
அறநெறியில் விழிப்போடு பொறுப் புணர்ந்து,
ஆற்றி மனம் செயல் தூய்மை ஆனபோதும்.
உறவுகளில் உண்மைநிலை உணர்ந்து ஆற்றி,
உயர்வான துறவுநிலை உணர்ந்த போதும்,
துறவுநிலை முடிவாகப் பெற்ற போதும்,
துய்த்த பேரின்பம் எவ்வாறுரைப்பேன்? (ஞாக.பா.1849)

வீடு பேற்று நெறியை அடியேன் அறிவது எப்படி? என்று தாயுமானவர் இப்பாடலில் வினா எழுப்புகிறார்.

ஆன்மீகப் பயணத்தில் வாழ்வின் நோக்கம் என்ன? எந்த மூலத்திலிருந்து வந்தோமோ அந்த மூலத்தை-- வெளியை அடைவதுதான் நோக்கமாக இருக்கும். இதற்கு இறையுணர்வு பெற வேண்டும். அறநெறி வாழ்க்கை வாழ வேண்டும்.

பற்றுவெகு விதமாகி, ஒன்றைவிட்டு ஒன்றனைப்
பற்றி உழல் கிருமிபோலப்
பாழ்ஞ்சிந்தை பெற்றநான், வெளியாக நின் அருள்
பகர்ந்தும் அறியேன். துவிதமோ

சிற்றறிவு, அது அன்றியும் எவரேனும் ஒருமொழி
திடுக்கென்று உரைத்தபோது
சிந்தைசெவி ஆகவே பறைஅறைய, உதரவெந்
தீ நெஞ்சம் அளவளாவ,

உற்று உணர உணர்வு அற்று, உன் மத்தவெறி யினர்போல
உளறுவேன். முத்திமார்க்கம்
உணர்வது எப்படி இன்ப துன்பம் சமானமாய்
உறுவது எப்படி? ஆயினும்

மற்று எனக்கு ஐய நீ சொன்ன ஒரு வார்த்தையினை
மலை இலக்கு என நம்பினேன்
மந்த்ரகுருவே யோக தந்த்ரகுருவே மூலன்
மரபில்வரும் மௌன குருவே." (தா.பா.46)

- மண்ணை இடமாகக் கொண்டு வாழும் புழுப்போன்று மனமானது பலவிதமாக, ஒன்றினை விட்டு ஒன்றினைப் பற்றி உழல்கின்றது.
- வீணான அறிவு பெற்ற நான், நினது திருவருளின் பெருமை குறித்து வெளிப்டையாகக் கூறி அறியேன்.
- என்னை உன்னின் வேறாக வைத்து இரண்டு என்று கூறின், அது என் அறியாமையே ஆகும்.
- அது தவிர, எவரேனும் திடும் என ஒரு வார்த்தை கூறின், மனமே செவிபோல் பறை அறைய. வயிற்றில் தோன்றிய சூடானது நெஞ்சம் வரை சென்று சேர, அதனால் உணர்வு அற்று, பெரும் பித்துக் கொண்டவன் போல உளறுவேன்.
- இது இவ்வாறிருக்க, வீடு பேற்று நெறியை அடியேன் அறிவது எப்படி? இன்பத்தையும் துன்பத்தையும் சமமாயப் பார்ப்பது

எப்படி? இருப்பினும், ஐய! நீ சொன்ன ஒரு வார்த்தையினை மலைபோல நம்பி இருக்கிறேன்.

வீடு பேற்று நெறியை அறிவது எப்படி என கேட்கிறார். வேதாத்திரியம் விடை தருகிறது.

"வெட்டவெளி பிரபஞ்சப் பொருள்கட் கெல்லாம்
வீடாகும். விண்கடந்த வானறிந்தால்,
வெட்டவெளி அணுஅறிவு ஒன்றாய்ப் போகும்.
வீடுபேறு எனும் உணர்ந்த பதமும் ஈதே!" (ஞாக.பா.1848)

நாம் நில உலகில் வாழ்ந்து கொண்டுள்ளோம். உலகமோ சூரியக் குடும்பத்தில் மூன்றாவது வட்டப் பாதையிலே தற்சுழல் இயக்கத்துடன் சூரியனைச் சுற்றி வருகிறது.

சூரியக் குடும்பமோ பால்வெளி மண்டலத்தில் பலகோடி சூரியக் குடும்பங்களிலே ஒன்றாக சுழன்று கொண்டுள்ளது.

பால்வெளி மண்டலமோ, எண்ணிலடங்காத மண்டலங்களை உள்ளடக்கிக் கொண்டு சுழன்று கொண்டுள்ள பிரபஞ்த்தின் ஒரு பகுதியாக சுழன்று கொண்டுள்ளது.

பிரபஞ்சத்திற்கு அப்பாலும் சுற்றிலும் சூழ்ந்தும் உள்ள சுத்தவெளி என்னும் வெட்டவெளியின் ஒரு பகுதியில் பிரபஞ்சமே சுழன்று கொண்டுள்ளது.

ஆகவே பிரபஞ்சத்திலே நாம் காணும் சடப்பொருள், சீவன் ஆகிய அனைத்துத் தோற்றப் பொருட்களுக்கும் இடமாக வீடாக இருப்பது சுத்தவெளியாகும்.

உடல் பற்று, உலகியல் பற்றுக்களிலிருந்து விடுதலை பெற்றால் வீடுபேறு என்னும் உயர்ந்த நிலையை மனிதன் பெறலாம்.

மனம்தான் மனிதனாக இயங்கிக் கொண்டுள்ளது. அந்த மனதை, மனத்திற்கு மூலமான விண் என்னும் உயிரில் ஒடுக்கிப் பழகினால், மன அலை நின்று நிலைக்கு வரும்.

மனதின் அடித்தளமாகிய அறிவில் நிலைத்தால் அறிவு விரிந்து. பிரபஞ்சத்தைக் கடந்து அப்பாலாக உள்ள சுத்தவெளியில் கலப்புற்று விடும்.

மனிதனின் சிற்றறிவைப் பேரறிவை உள்ளடக்கமாகக் கொண்ட சுத்தவெளியில் கலப்புறச் செய்வதே வீடுபேறு என்ற உயர்ந்த பதம் என்னும் பக்குவம் ஆகும்.

வீடுபேறு என்னும் பெரும் பதம் அடைந்தவர்கள் தானும் வாழ்ந்து மற்றவர்களையும் வாழ வைக்கக் கூடியவர்கள் ஆவர்.

நாமும் அவர்களைப் போல் வாழ்ந்து மற்றவர்களுக்கும் தொண்டாற்றி- இன்புற்று -ஆனந்தமாக வாழ்வோமாக!

# துணைநின்ற நூல்கள்


1. தாயுமானவர் பாடல்கள், புலவர் வீ.சிவஞானம், விஜயா பதிப்பகம், கோவை.
2. ஞானக்களஞ்சியம், வேதாத்திரி மகரிஷி, வேதாத்திரி பதிப்பகம், ஈரோடு
3. தாயுமானவர் நூல்கள், சுவாமி சித்பவானந்தர், திருப்பராய்த்துறை.
4. இணையதள தகவல்கள்.
5. ஞானக்களஞ்சிய கவிகள், இரா. மாரியம்மாள் மோகன்தாஸ், வேதலோக அன்பு நிலையம், பொள்ளாச்சி
6. தாயுமானவரின் ஆனந்தக்களிப்பு, மன்னார்குடி பானுகுமார். அழகுப் பதிப்பகம், சென்னை.
7. தாயுமானவரும் வேதாத்திரி மகரிஷியும், மன்னார்குடி பானுகுமார். விஜயா பதிப்பகம், கோவை.
8. பாரதியார் கவிதைகள், பாரதியார்
9. வேதாத்திரி மகரிஷியின் பொன்மொழிகள் 5000, மன்னார்குடி பானுகுமார். விஜயா பதிப்பகம், கோவை.
10. உள்முகப் பயணம், ஜெ.வெண்ணிலா, இணையதள முகநூல் பக்கம்.